விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை (23.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.நா. தீர்மானத்திற்கு அமைய இராணுவத்தை வெளியேற்றுக!

### நேற்றைய போராட்டத்தில் மாவை கடுந்தொனி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக எங்கள் நிலங்களில் இருந்து ஆதிக்கம் செலுத்தும் இராணுவம் வெளியேற்றப்படும் போதுதான் இங்கு மீண்டும் அமைதியான ஒரு ஜனநாயக நிலையினை ஏற்படுத்த முடியும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தாக்கப்பட்டதனைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமுள்ள பிரதேச சபைகளில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நேற்று நடைபெற்றன.

இதில் நல்லூர் பிரதேச சபை முன் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் போர் முடிந்து விட்டது என சொல்லப்படும் 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டமை மற்றும் காணி அபகரிப்புகள் போன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

மாதகல் மேற்கில்

## 20 வருடங்களின் பின் நேற்று மீள்குடியமர்வு!



20 வருடங்களுக்குப் பின்பு மீள்குடியேற

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாதகல் மேற்குப் பகுதியில் 20 வருடங்களின் பின்பு மக்கள் நேற்று மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காடு படர்ந்துள்ள தமது வாழ்விடங்களுக்கு சென்ற மக்கள் கண்ணீருடன் தமது வீடுகளைத் தேடி வருகின்றனர். (02ஆம் பக்கம் பார்க்க)

# 13-வது திருத்தத்தை நீக்குவது அரசியல் ரீதியாகத் தவறானது!



## டில்லியில் இருந்து குரல்

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றிய 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு ரத்து செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் இலங்கையில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசு 13-வது சட்டத் திருத்தத்தை ரத்துச் செய்யுமானால் அது அரசியல் ரீதியாக பிழையான ஒரு நடவடிக்கையாக இருக்கும் என இலங்கை-இந்திய உறவுகள் குறித்து கவனம் செலுத்திவரும் டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர் சகாதேவன் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## ஆவணம் சட்டபூர்வமானது

### - மொஹான் பீரிஸ்

இலங்கை தயாரித்த மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டு திட்டம் சட்டபூர்வமானதொரு எழுத்து ஆவணம் என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ள அவர் வழங்கிய செவ்வியின்போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான சிறந்த பல (02ஆம் பக்கம் பார்க்க)

## 13-வது திருத்த சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும்!

### கோத்தபாய மீண்டும் பேச்சு

13ஆம் திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் யுத்தத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தந்திரோபாயங்கள், 13ஆம் திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


வடக்கில் இராணு முகாம்களை அமைக்கும் பணிகளுக்கு உதவிகளை வழங்க வேண்டாம் என சீன தூதரகத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பு செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக (02ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைவது சாத்தியமில்லை!

### அரசின் பேச்சால் சம்பந்தன் முடிபு



பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட பல முக்கிய உறுப்பினர்கள் 13-ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று வலியுறுத்தும் போது, எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைவது என்று இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இந்தக் (20ஆம் பக்கம் பார்க்க)

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்
விற்பனைக்கு பிந்திய இலவச சேவைகள்


SAFARI
72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்


GALAXY 100
100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்


CAMY 80
80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்


SUPER CUP
4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN
~~Rs. 145000/=~~
Rs. 130500/=

ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொடிகாமம், பரித்தித்துறை
தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்
சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனிதாபிமானத்திற்கு சவாலாக வளர்ச்சியடைந்த நாடுகள்!

## ஐக்கிய அரபில் மகிந்த பேச்சு

சகல மனிதாபிமானத்திற்கும் வளர்ச்சியடைந்த நாடுகளே சவாலாக இருக்கின்றன என ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறும் உலக சக்தி மாநாட்டில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சில அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நிலையான சுற்றுப்புறசூழல் நட்பு அல்லது நெறிமுறைகள் இல்லை. வளங்களை பகிர்ந்து கொள்ளாமையினால் சக்தியில் பாரிய வித்தியாசங்கள் மற்றும் பெரும் குறைபாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் எடுக்கின்ற இவ்வாறான தீங்கு விளைவிக்க கூடிய நடவடிக்கைகள் மனிதாபிமானத்திற்கு சவாலாக அமைந்துள்ளன. ஆசிய பொருளாதார வளர்ச்சி மைல்கல் வேகத்தில் இருக்கின்றது.

கடந்த இரண்டு தசாப்தங்களில் ஆசியாவின் மக்கள் வறுமையை வெளியே இழுத்தெடுத்தனர். இது விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது அபிவிருத்தி அடைந்த நாடுகளும் நீண்டகால மற்றும் பயன் தரக்கூடிய எரிசக்தி வளம் எது என்பதைச் சரியாக தெரிவு செய்ய வேண்டும் என்றார். (ந-11)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று வாணி விழா அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# கார்ட்டூன் ஆசியர் காணாமல்போய் 1000 நாட்கள் ஆகிவிட்டன!

## ஐ.நா விடம் உறவுகள் மகஜர்

இலங்கையில் கடத்தப்பட்டும் காணாமல் போயும் இருப்பவர்கள் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து வெளியிடுவது தொடர்பில் ஐ.நாவின் தலைமைச் செயலர் பான் கீ மூன் தங்களுக்கு உதவ வேண்டுமென்று காணாமல்போனவர்களின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் அரசாங்கத்தை விமர்சித்து எழுதி வந்த பத்திரிகையாளரும் கார்ட்டூன் ஓவியருமான பிரகீத் ஏக்னெலிகொட காணாமல்போய் ஆயிரம் நாட்கள் ஆவதைக் குறிக்கும் முகமாக கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. மூன்று வருடங்கள் ஆகிவிட்டபோதும் ஏக்னெலிகொட பற்றிய ஒரு விவரமும் இதுவரை கண்டறியப்படவில்லை.

என் கணவர் எங்கே? என் அப்பாவுக்கு என்னானது? கொழும்பு ஐ.நா அலுவலகம் முன்பு நேற்று நடந்த ஆர்ப்பாட்ட கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஏக்னெலிகொடவின் மனைவி, மகனிடத்தில் சோகமும் விரக்தியும் காணப்பட்டது. என் கணவர் எங்கே என்று மனைவியும் அப்பா எங்கே என்று மகனும் வேதனையுடன் கேட்டதைக் கேட்கமுடிந்தது.

இவர்கள் மட்டுமல்லாது இலங்கையில் வேறு பலரும் காணாமல்போன தமது குடும்ப உறுப்பினர்கள் பற்றி எவ்வித தகவலும் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

காணாமல்போன தமது கணவன் அல்லது மகன் பற்றிய தகவல் வேண்டும் எனக் கேட்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் வேறு 15 பேரும் ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

ஆட்கள் காணாமல் போகும் அவலத்தை முடிவுக்கு கொண்டு வருதிலும் காணாமல் போனவர்களின் நிலை பற்றி உண்மையை வெளிக்கொண்டு வருவதிலும் முன்னேற்றம் காணப்பட வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஐ.நாவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. (ந-11)

# புதிய வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை Butterfly Internatinal School இல் நாளை புதன்கிழமை புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதாக பணிப்பாளர் வி.ரி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

ஆங்கில மொழி மூலம் பாலர் வகுப்புக்கள், பாடசாலை மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்பு, கணனி கற்கைநெறி ஆகிய வகுப்புக்களே நடைபெறவுள்ளன.

அத்துடன் அன்றையதினம் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஏடு தொடக்குதல் நிகழ்வும் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-9)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



விஜய் இயக்கத்தில்
சியான் விக்ரம், அனுஷ்கா,
எமி ஜக்சன், சந்தானம்
மற்றும் பலர் நடிப்பில்
தாண்டவம்
D.T.S
10.30, 2.30, 6.30, 9.30

ஏடு தொடக்குதல்
24.10.2012 விஜயதசமி அன்று
காலை 8.30 மணிக்கு
பேராசிரியர் க. தேவராஜா
அவர்களால் ஏடு தொடக்கி வைக்கப்படும்.
மழலைப் பூங்கா முன்பள்ளி
The Express Institute
Irupalai Junction-Kopay
(C-1360)

வேலையாள் தேவை
யாழ். நகரில் இயங்கும் எமது ஜவுளி நிறுவனத்திற்கு புடவை அனுபவமுள்ள ஆண்கள் தேவை. நேரில் வரவும்.
சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(810)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
ஏல விற்பனை

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட பொருட்கள் 25.10.2012 வியாழக்கிழமை அன்று காலை10.30 மணிக்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு முன் ஏலத்தில் விற்கப்படும்.

1. மின்சார உபகரணங்கள்
2. தளபாடங்கள்
3. அலுவலக உபகரணங்கள்

மேற்படி பொருட்களை 24.10.2012 காலை 10.30 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை சிரேஷ்டஉதவிப் பதிவாளர் /நிர்வாகக்கிளையுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் செலுத்தி பொருட்களை அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

பதிவாளர்
(C-1365)


# இலங்கை அகதியை ஏமாற்றிய இந்திய திரைப்பட தயாரிப்பாளர்!

இந்தியாவின் இராமநாதபுரத்திலுள்ள இலங்கை அகதி ஒருவரை வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி ஏமாற்றிய தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் வேலை செய்வதற்கு விசா பெற்றுத் தருவதாக கூறி, இராமநாதபுரத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த வசந்தகுமார் என்பவர் செய்த முறைப்பாட்டை தொடர்ந்தே குறித்த திரைப்படத் தயாரிப்பாளர் சென்னை விருகம்பாக்கத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கியூ பிரிவு தகவல்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட இந்த் திரைப்பட தயாரிப்பாளரிடமிருந்து எட்டு போலி கடவுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். படத் தயாரிப்பிற்காக தான் பட்ட கடன் சுமை தாங்க முடியாமலேயே இப்படியான வேலையில் ஈடுபட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அவர் அகோரம் எனும் தமிழ்த் திரைப்படத்தை தயாரித்துள்ளார். இவரது தம்பியும் இவ்வாறு ஆட்களை ஏமாற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ந-11)

## 13-து திருத்தத்தை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறையாண்மை பெற்ற ஒரு நாடு என்ற வகையில் எந்த ஒரு சட்டத்தையும் நிறைவேற்றும் உரிமை இலங்கைக்கு உண்டு. எனவே இந்த சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தின் மூலமாக ரத்து செய்வதென்பது சட்டப்படி சாத்தியமே என்றாலும் அது அரசியல் ரீதியில் தவறான ஒரு நடவடிக்கையாக இருக்கும் என அவர் கூறினார்.

ஏனென்றால், இந்த சட்டத்திருத்தம் இலங்கையின் மற்ற சட்டத்திருத்தங்களைப் போன்றதல்ல. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண கொண்டு வரப்பட்ட ஒரு நடவடிக்கை. இலங்கையில் போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும், தமிழ் சிறுபான்மையினருக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைத் தர அரசு முன்வரவில்லை என்ற கருத்து சர்வதேசத்தில் மேலோங்கியிருக்கும் நிலையில், இவ்வாறான நடவடிக்கை, இலங்கைமீதான நம்பகத்தன்மையை பாதிக்கும் என்றார் சகாதேவன்.

இந்தியா இந்த நடவடிக்கையைத் தடுக்குமோ இல்லையோ! ஆனால் நிச்சயம் வரவேற்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தச் சட்டத்திருத்தம் இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்டது என்ற கருத்து தவறானது என கூறிய சகாதேவன், இலங்கையில் இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தத்தை அடுத்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கும்அரசுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றங்களை ஒட்டியே இந்த சட்டத் திருத்தம் வந்தது என்று சமீபத்தில் இந்தியா வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் சந்திப்பில் கூறியதை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த சட்டத்திருத்தம் வெளிநாட்டினால் திணிக்கப்பட்டதல்ல. உள்நாட்டு வழிமுறையிலேயே உருவானது என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

## 13-வது திருத்த...

தமிழர் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாக கூட்டமைப்பினர் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்கள் முட்டாள்தனமானவை.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சமாதானம் நிலவும் காலத்திலும் பாதுகாப்பு விவகாரங்களில் தலையீடு செய்யும் அதிகாரமோ உரிமையோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு கிடையாது. தமிழீழ விடுதலைப்புலிகளினால் யுத்த ரீதியாக அடைய முடியாத இலக்குகளை அடைவதற்கான களமாக 13ஆம் திருத்தச் சட்டத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

அரசாங்கம் நட்பு நாடுகளுடன் பேணி வரும் உறவுகளில் விரிசலை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டுவரும் முயற்சிகள் சர்வதேசத்தினால் புரிந்து கொள்ளப்படவேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் சீனர்கள் மீது இரண்டு தடவைகள் தாக்குதல் நடத்தி கொலை செய்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல் செய்திகளை கூட வெளியிடவில்லை. ஆனால் இப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேவையற்ற வகையில் இனமுரண்பாடுகளை தூண்ட முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ந-11)

## ஆவணம்...

வேலைத்திட்டங்கள் தற்சமயம் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை அடிப்படையாக கொண்டே இந்த நடவடிக்கைகள் முன் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்சமயம் மீள் எழுச்சி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்த முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி போராளிகளில் 635 பேருக்கே இன்னமும் புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## 20 வருடங்களின்...

அனுமதிக்கப்பட்டதனால் தாம் வாழ்ந்த வீடுகள் எல்லாம் உருக்குலைந்து போயுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

விஷ ஜந்துக்களின் ஆபத்து இருப்பதிலும் தமது வாழ்விடங்களைச் சுத்தப்படுத்தும் முயற்சியில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மாதகல் மேற்கு மக்கள் ஈடுபட்டுள்ளனர். (ந-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆறுவது சினம்

எனக்குத் தெரிந்த ஆன்மீகத்திலே மிகவும் ஈடுபாடு கொண்ட ஒருவர் இருந்தார். அதேநேரம் அரசாங்கத்திலே பொறுப்பான உத்தியோகம்.

அனைத்திலேயும் அவர் கெட்டிக்காரன். அவராலே முடியாத காரியம் என்று எதுவுமே கிடையாது.

அவர் எப்போதும் எதைப் பற்றியாவது யாரிடம் பேசிக் கொண்டே இருக்கவேண்டும்.

மௌனமாக இருக்கிறது அவரைப் பொறுத்தவரைக்கும் மிகவும் கஷ்டமான காரியம். இப்படிப்பட்டவர் என்ன செய்தார் என்றால்.... வாரத்திலே ஒருநாள் மௌன விரதம் இருந்தார்.

அதுவும் அவர் வேலை செய்யும் அலுவலகத்தில் வழக்கமாக புதன்கிழமையன்று மௌனவிரதம் இருப்பார். எவரிடமும் கதைக்கமாட்டார். ஆனால் அலுவலக வேலைகள் அனைத்தும் ஒழுங்காக நடக்கும்.

"மௌனவிரதம்" என்பது உங்களுக்கு கஷ்டமான விடயம் என்று அவரைப் பார்த்து ஒருநாள் கேட்டேன்.

"நமக்கு எது கஷ்டமான செயலோ அதைச் செய்வது தான் பெருமை" என்று அவர் பதில் கூறினார்.

ஒரு பையன் இருந்தான். ஒளிவு மறைவு இல்லாத சுபாவம். அவனிடம் என்ன குறையென்றால் அவசரப்பட்டு சிந்திக்காமல் உணர்ச்சி வேகத்திலே எதையாவது செய்து விடுவான். அவனுக்கு சடாரென கோபம் வந்துவிடும்.

ஒருநாள் அரவிந்தர் அந்தப் பையனைப் பார்த்தார். "தம்பி! நீ மிகவும் புத்திசாலி தான். அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை" உன்னாலே எல்லாம் முடியும். அந்த அளவுக்கு வலு இருக்கிறது உன்னிடம். இருந்தாலும் நான் இப்போது உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் என்றார்.

"கேளுங்கள்" என்றான் பையன்.

"உன்னை மாதிரி பலசாலியாக உள்ள பையனுக்கு கடினமான செயல் எது? அடிக்கு அடி கொடுப்பதா? அதாவது உன்னை ஒருத்தன் அவமதித்துவிட்டால் உடனே அவன் முகத்திலே ஒரு குத்து விடுவது கடினமான செய லா? இல்லாவிட்டால்...... அந்த நேரத்திலே உன் கையை கெட்டியாக மூடிக்கொண்டு காற்சட்டைப் பையினுள் வைத்துக் கொள்வது கடினமான செயலா?" என்று கேட்டார் அரவிந்தர்.

"என்னைப் பொறுத்தவரைக்கும் உடனே அவன் முகத்திலே ஒரு குத்துக் கொடுப்பது மிகவும் சுலபம். அந்த நேரத்திலே கையை மூடிக்கொண்டு அமைதியாக இருக்கிறது மிகவும் கஷ்டம்" என்றான் பையன்.

உன்னை மாதிரி வீரமுள்ள பையனுக்கு எது பெருமை? சுலபமான காரியத்தைச் செய்வதா? கடினமான காரியத்தைச் செய்வதா? என்று கேட்டார் இவர்.

பையன் சற்று தயங்கினான்; யோசித்தான்.

கடினமான செயலை செய்வது தான் பெருமை என்றான். "மிகவும் நல்லது; இன்னொரு சந்தர்ப்பம் வரும்போது நீ அதுமாதிரி நடந்து கொள்" என்று கூறிவிட்டு அவர் போய் விட்டார்.

நாட்கள் உருண்டோடின. ஒருநாள் அந்தப் பையன் அரவிந்தரைத் தேடி வந்தான். நியாயமாக பெருமையுடன் அவர் முன்னால் நின்றான்.

"என்னால் அதிக கடினமான செயலை செய்ய முடிந்தது" என்றான்.

"என்ன நடந்தது" என்று விசாரித்தார் .பையன் சொன்னான் ஐயா என்னுடன் வேலை செய்யும் பையன் ஒருவன் மிகவும் கோபக்காரன். அவன் என்னை அடித்து விட்டான். நானும் திரும்ப அடிப்பேன் என எதிர்பார்த்தான் அதற்கு தகுந்த மாதிரி எச்சரிக்கையாக இருந்தான். அந்த வேளையில் எனக்கு நீங்கள் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அது நான் நினைத்ததை விட கடினமாகத்தான் இருந்தது.

இருந்தாலும் நான் கையை கெட்டியாக மூடி காற்சட்டையினுள் வைத்துக் கொண்டேன். அதனால் எனக்கு கோபம் அடங்கிவிட்டது. அவனுக்காக கோப்படவில்லை. வருத்தப்பட்டேன்.

சிறிது நேரம் சென்ற பின்னர். கையை குலுக்குவதற்காக அவன் பக்கமாக எனது கையை நீட்டினேன். உடனே என்னைக் கட்டித் தழுவி நான் என்றுமே எனது நண்பன் என்றான். இப்படியாக அந்த பையன் கூறியது அரவிந்தனுக்கு மிகவும் மகிழ்ச்சி.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இசைஞானியின் இசைவிழாவை புறக்கணிக்குமாறு கோரிக்கை

## கனேடிய தமிழர் பேரவை வலியுறுத்து

(சென்னை)

கனடாவில் இளையராஜாவின் இசைவிழா எதிர்வரும் நவம்பர் மாதம்3 ஆம்திகதிநடைபெறவுள்ளது.

இவ் இசைவிழாவை புறக்கணிக்குமாறு கனடா வாழ் தமிழர்கள் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

கனடா வாழ் தமிழர் சங்கத்தினர் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் கூறியுள்ள விடயங்கள் வருமாறு.

எங்களின் தொப்புள்கொடி உறவான கலைஞர்களே ஈழத்தமிழர்களின் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதீர்கள். நாங்கள் இழந்தது ஒன்று இரண்டல்ல பல இலட்சக் கணக்கான எங்கள் சொந்தங்களையும் மண்ணையும் இழந்து உலகப் பந்தெங்கும் ஏதிலிகளாக அலைகின்றோம் .

எமக்கு இன்னும் நீதியோ அரசியல் உரிமையோ கிடைக்கவில்லை.

இந்த நவம்பர் மாதத்திலாவது அழுவதற்குச் கூட இலங்கை அரசு விடுவதாக இல்லை. ஈழத் தமிழனுக்கு இன்று இருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை நட்சத்திரங்களாக இருப்பவர்கள் புலம்பெயர் தமிழர்கள் தான்.

எங்களுக்குஇசைஞானி இளையராஜா மேல் ஒரு வெறுப்பும் இல்லை. நவம்பர் மாதத்தில் எந்தவொரு ஆடம்பரமும் வேண்டாமென்பதுதான் கனேடிய தமிழர்களின் வேண்டுகோள். கனடாவிலுள்ள தமிழ் மக்களின் எதிப்பார்ப்பினால் இவர்கள் எதிர்பார்த்த் மாதிரி நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகாமையினால் ஆங்காங்கே சிறிய நிகழ்வுகளை வைத்து நுழைவுச் சீட்டுக்களை இலவசமாக விநியோகிக்கிறார்கள். எனவே நவம்பர் 3 இல் நடைபெறும் இளைய ராஜாவின் இசை விழாவைப் புறக்கணிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# இராசி பலன்

23.10.2012
(ஐப்பசி 07, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
நவமி முன்னிரவு 11.59மணிவரை
திருவோணம் முன்னிரவு 10.08 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
மகா நவமி விரதம்

**மேடம்** சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** ஆன்றோர் சந்திப்புண்டு, தொழில் நிமித்தம் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தந்தை வழி உறவினர்களின் வருகையுண்டு, பக்குவமாக நடத்து பாராட்டு பெற வேண்டிய நாள்

**மிதுனம்** வழிபாட்டில் சுகம் காண வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சியில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம், பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள்

**கடகம்** எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிப்பது நல்லது, அபூர்வ சந்திப்புண்டு, முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய் தொழிலில் மேன் மையும் உயர்வும் கிடைக்கும்.

**கன்னி** எதிர்பார்த்த தன வரவுகள் இல்லம் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் முன் னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மாற்றினத்தவர்கள் வழியில் மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்க சுபாவமுண்டு.

**விருச்சிகம்** பக்குவமாகச் பேசி காரியங்களை சாதித்து கொள்வீர்கள், விருந்தினர்கள் வருகையுண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு , பயணங்களால் பலனுண்டு போசன சுகமுண்டு

**தனுசு** புதிய தொழில் தொடங்கும் சிந்தனை மேலோங்கும், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள் போசன நன்மையுண்டு.

**மகரம்** வியாபார நலன் கருதி புதிய மனிதர்களைச் சந்திப்பீர்கள், மன அமைதிக்கான மகத்தான வழிபாடுகளைச் செய்ய வேண்டிய நாள், கற்பனைகள் அதிகரிக்கும்.

**கும்பம்** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மாலையில் மகிழ்ச்சி தரும் பயணமொன்று உருவாகலாம், உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் விரும்பியபடியே கைகூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்

வளவன்

# கணக்காளர் சேவை தரம் III போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காளர் சேவையில் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை (Finacial Accounting paper I) பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை (Finacial Accounting paparII) எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல்9.30 தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை (cost mangement Accounting) பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை (public Financial mangement) 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை (Auditing and investigations) பிற்பகல் 1.15 மணி தொடக்கம் 2.45 மணிவரை General intelligence and comp. part (A) comprehension பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை (General intelligence and comp. part (B) General intelligence ஆகிய பாடங்கள் நடைபெறும். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 30-50 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 35-40 | 60 |
| தக்காளி | 80 | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 30 | 40 |
| கோவா | 110 | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 80 | 70-80 | 140 |
| பூசணி | 70 | 30 | 25-30 | 50 |
| புடோல் | 50 | 70 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 25-30 | 60 |
| சின்ன வெங்காயம் | 85 | 70 | 40-60 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 140 | 110 | -- | 100 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 20 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 50 | 70 |
| பயற்றங்காய் | 110 | 110 | 70 | 100 |
| லீக்ஸ் | 110 | 100 | 80 | 110 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80-90 | 100 |
| முருங்கைக்காய் | 70 | 90 | 30-40 | 40 |
| போஞ்சி | 120 | 110 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 70 | 5 | -- | -- |
| [illegible] | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 28-32 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இதில் நூலக வாசகர்களும் நூலக அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-29)


*******

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கோகுலம், கோமாதா அறநெறிப்பாடசாலைகளின் கலைமகள் விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு அராலி தெற்கு அகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் ஆலய அறங்காவலர் சிவத்திரு சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையை அகாயக்குளம் விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ தி.சர்வேஸ்வரக்குருக்கள் ஆற்றவுள்ளார். அத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-9)

*******

திருநெல்வேலி துர்க்கையம்பாள் திருக்கோவிலில் விசேட நவராத்திரிவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெறவுள்ளது. இதில் மூன்று சக்திகளின் திருவீதியுலா இடம்பெறும். (அ)



நன்றி:மிரர்

# தவிசாளர் மீதான தாக்குதலை கண்டித்து சபைகளில் ஆர்ப்பாட்டம்

**வலி.கிழக்கு பிரதேச சபையில் ஆர்ப்பாட்டம்**

ஜனநாயக ரீதியில் சபைகளை நடத்த அரசாங்கம் ஒத்துழைப்பு தர வேண்டும் என கோரிக்கை விடுத்ததோடு மக்கள் பிரதிநிதிகள் தாக்கப்படுவதை கண்டிப்பதாக வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் பிரதேச சபைத்தவிசாளர் ப.வசந்தகுமார் மீது கடந்த 14 ஆம் திகதி கொக்குவில் பகுதியில் வைத்து இனம்தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தை கண்டித்து நேற்று யாழ்.மாவட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள பிரதேச, நகரசபைகளுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வசமாகவுள்ள நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிப்பதோடு எதிர்காலத்தில் ஜனநாயக முறையில் சபைகளை நடத்தக்கூடிய வழிவகைகளை அரசாங்கம் ஏற்படுத்தித்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

தேர்தல் காலங்களின் போதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டதோடு தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டனர். ஆட்சியை கைப்பற்றிய பின்பும் தாக்குதலுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

அரசாங்க உயரதிகாரிகளினாலும் அரசாங்கத்தின் அரசியல்வாதிகளினாலும் பல நெருக்கடிகளை நாம் எதிர்கொண்டு வருகின்றோம்.

அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என கூறிக்கொண்டு அபிவிருத்திக்கு தடையாக செயற்படுகின்றது அரசாங்கம்.

அதற்கு எமது சபைகளிலுள்ள அரச அதிகாரிகளும் உடந்தையாகவுள்ளனர். பல இடையூறுகளை ஏற்படுத்துகின்றனர். எனவே இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பை தடுத்து நிறுத்துவதோடு மக்கள் பிரதிநிதிகள் மீதான தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமது கைகளில் எதிர்ப்பு பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

அதில் மக்கள் ஆட்சியை மதித்து நட, **ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்காதே, ஜனநாயகத் தலைவர்கள் மீது தாக்காதே, வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரி, எமது நிலம் எமக்கு வேண்டும்** போன்ற பதாகைகளை தாங்கியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இருப்பினும் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவரும் பங்கு கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சாவகச்சேரி நகர சபையில் ஆர்ப்பாட்டம்**

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றி ஒரு மணித்தியாலத்திற்கு தமது சபை நடவடிக்கைகளை நிறுத்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நிறைவேற்றப்பட்ட கண்டன தீர்மானங்களாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்களைப் பாதுகாக்க முற்பட்ட வேளை இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டமையை வன்மையாக இச்சபை கண்டிக்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் பொதுமக்களின் காணிகளையும் உள்ளூராட்சி சபைகளின் காணிகளையும் பொதுக்காணிகளையும் இராணுவம் அடாவடியாக பெற்றுக் கொள்வதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு அரசினால் ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகளை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற கண்டன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் அவர்கள் ஏந்தி நின்ற சுலோக அட்டைகளில் **ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட சபைகள் சுதந்திரமாக செயற்பட அனுமதி! எமது நிலம் எமக்கு வேண்டும்! சிறு அலகையாவது ஆழ விடு! எம்மக்களை எமது சொந்த நிலத்தில் வாழ அனுமதி! உள்ளூராட்சி தலைவர்களின் உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து! உள்ளூராட்சி சபையில் அரச தலையீட்டை நிறுத்து** போன்ற வாசகங்களை தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ-6-3-29)




# சுவாமி ஞானப்பிரகாசர் ச.ச.நிலையம் மீது நேற்றுமுன்தினம் கழிவுஓயில் வீச்சு



(யாழ்ப்பாணம்)

மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்திற்கு இனந்தெரியாத விசமிகளினால் கழிவெண்ணெய் வீசப்பட்டுள்ளது.

குறித்த சனசமூக நிலையத்தின் திறப்புவிழா நேற்றைய தினம் இடம் பெறவிருந்த நிலையிலேயே இவ் கழிவெண்ணெய் வீச்சு நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் சனசமூக நிலைய செயலாளர் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தேவாலய வீதி மல்லாகத்தில் இயங்கி வந்த ஞானப்பிரகாசர் சனசமூக நிலையமும் படிப்பகமும் குறுகிய வருடங்கள் இயங்காத நிலையில் மீண்டும் பழைய அங்கத்தவர்களும் பிரதேச மக்களும் சேர்ந்து புனரமைப்பு செய்தவேளை குறித்த சனசமூக நிலையக் கட்டடம் அமைந்திருந்த காணியினை அன்பளிப்பு செய்த உறவினர்கள் சிலர் இக்காணியினை திரும்பத்தர வேண்டும் என கோரியிருந்த நிலையிலேயே திறப்புவிழாவிற்கு முன்னதாக கழிவு எண்ணெய் வீசப்பட்டு உள்ளது.

இக்கழிவு வீச்சு இடம்பெற்ற போதும் திறப்புவிழா நேற்றையதினம் திட்டமிட்டபடி குறித்த சனசமூக நிலையத்தால்திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மல்லாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மே அண்மைக்காலங்களில் அனைத்து மட்டத்தினரும் தமது வன்முறைகளுக்கு கழிவெண்ணெயை ஆயுதமாக பயன்படுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-4)

# கொல்களமாக மாறியது கைதடி நன்னீர்த்திட்ட அணை

## நடவடிக்கை எடுத்தது வலி.கிழக்கு பிரதேச சபை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மாடுகள் கடத்தி கொண்டு வரப்பட்டு கைதடி நன்னீர்த்திட்ட அணைப்பகுதியில் வைத்து வெட்டப்படுவதாக வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபைக்கு அப்பகுதி மக்கள் தெரியப்படுத்தியதையடுத்து அதனைத் தடுக்க பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருவதோடு சுகாதார சீர்கேடாகவுள்ள அப்பகுதியை சுத்தப்படுத்தும் நடவடிக்கையிலும் இறங்கியுள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பிரதேச சபைத் தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைதடி நன்னீர்த்திட்ட அணைக்கட்டு பகுதியில் வைத்து சட்டவிரோதமாக மாடுகளை வெட்டி விற்பனை செய்து வருகின்றனர். அது மட்டுமன்றி பல இடங்களிலிருந்தும் கழிவுகளை எமது பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு வந்து கொட்டிவிட்டு செல்கின்றனர்.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உடன்நடவடிக்கையினை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அத்தோடு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்த உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பது மாகாணங்களை ஐந்தாக குறைப்பதே அரசின் நோக்கம்

## ஐ.ம.மு.தலைவர் மனோ தெரிவிப்பு

**இலங்கை- இந்திய ஒப்பந்தம் வழிகாட்டிய 13 ஆவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் இல்லாது ஒழித்து இந்நாட்டில் இன்றுள்ள ஒன்பது மாகாணங்களின் எல்லைகளையும் மீளமைத்து அவற்றை ஐந்து மாகாணங்களாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் இரகசிய திட்டம் தீட்டியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பில் சில அரச சார்பு தீவிரவாத கட்சிகள் தொடர்ந்து பேசி வருவது தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகள் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. இந்த இலக்கை முன்வைத்தே அரசாங்கம் இன்று காய் நகர்த்துகிறது. இந்தத் தகவலை முடியுமானால் அரசாங்கத்தின் அதிகாரபூர்வ பேச்சாளர் மறுக்கட்டும். அதேபோல் அரசில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளும் இடதுசாரி கட்சிகளும் இதற்கு பதில் சொல்லட்டும்.

முழு நாட்டையும் சிங்கள, பௌத்த நாடாக அறிவிக்க வேண்டும் என்பதுவே இவர்களது கொள்கைத் திட்டம். இதன் முதற்கட்டமாக 13 ஆவது திருத்தமும் அதையொட்டிய மாகாண சபைகளும் ஒழிக்கப்படும். இரண்டாம் கட்டமாக நாட்டின் மாகாணங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு ஒன்பது மாகாணங்கள் ஐந்து மாகாணங்களாகஅறிவிக்கப்படும்.

இதன் மூலம் எந்த ஒரு மாகாணத்திலும் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்க மாட்டார்கள். மூன்றாவது கட்டமாக அனைத்து நிர்வாக மற்றும் தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் சிறுபான்மையாக மாற்றப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு எந்த ஒரு மாவட்டத்திலும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருக்க முடியாத நிலைமை உருவாக்கப்படும்.

இன்று வடமாகாணத்தில் தமிழர்களும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இந்த மாகாணங்களுக்கு உள்வரும் மாவட்டங்களிலும் தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படும். அனைத்து மாகாணங்களுக்கும் கடல் எல்லை அவசியம் என்ற காரணத்தை காட்டி மாகாண எல்லைகளை மீளமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் மாகாண, மாவட்டங்களின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டு அனைத்து மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் சனத்தொகை குடிப்பரம்பல் மாற்றி அமைக்கப்படும்.

இதுதான் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வாகும். இந்த இலக்கை நோக்கியே அரசாங்கம் பயணம் செய்கிறது. இதன் முதற்கட்டமாகவே 13 ஆவது திருத்தத்திற்கும் மாகாண சபைகளுக்கும் எதிரான பிரசார இயக்கத்தை அரசாங்கம் இன்று தனது பங்காளி கட்சிகள் மூலமும் பாதுகாப்பு செயலாளர் மூலமும் ஆரம்பித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பரிசில் நாளில் சாதனையாளர்களை வாழ்த்துகின்றோம்

**க.பொ.த.(சா/த) உயர் பெறுபேறு- 2011**

செல்வி. சி.தேனுசா- 4AB4C
செல்வன் ப.குணசீலன் -3A4B2C
செல்வி ஜெ.ஜெயஸ்ரிகா-3A2B2C2S
செல்வன் இ.கோமதன் -2A2B2CS
செல்வி ஞா.விதியா-2A5B2C
செல்வன் யோ.லக்ஷன்- 2AB3C2S
செல்வன் ச.லயூதரன்-2A6C

**க.பொ.த (உ/த) உயர் பெறுபேறு**

செல்வி ச.வனுராகினி (விஞ்) 2BC (மாவட்டநிலை 67)
செல்வி. இ. அனோஜா (விஞ்)C2S (மாவட்டநிலை 218)
செல்வன் செ. டனோசியன் (வர்த்) 2CS (மாவட்டநிலை 101)
செல்வி சி.ஜனனி (கலை)A2B (மாவட்டநிலை 20)
செல்வி நா.தர்சிகா (கலை)A2B (மாவட்டநிலை 158)
செல்வி ந.தாரணி (கலை)3B (மாவட்டநிலை 203)
செல்வி பா.ராகினி (கலை)A2BC (மாவட்டநிலை 212)
செல்வன் இ.பகீரதன் (கலை)ABC (மாவட்டநிலை 240)
செல்வன் தெ.திலோத்தமன் (கலை)2BC (மாவட்டநிலை 285)
செல்வி கு.கார்த்திகா (கலை) ABS (மாவட்டநிலை 291)
செல்வி யோ.நர்மிதா (கலை) 2BC
செல்வி வீ.கஜேந்தினி (கலை) 2BC
செல்வன் பு. பிரோஜன் (கலை) B2C
செல்வி இ.மயூரி (கலை) A2C
செல்வி.யோ.சுதாஜினி (கலை) B2C
செல்வி தெ.கனிதா (கலை) 2BC
செல்வி பா.சஞ்சிகா (கலை) B2C
செல்வி ஜெ.வித்தியா (கலை) B2C
செல்வி நா.லாவண்யா (கலை) B2C
செல்வி கு.தட்சாயினி (கலை) B2C
செல்வன் இ.லக்சன் (கலை) B2C
செல்வன் வி. விதுசன் (கலை)B2C
செல்வன் த.பிரதாபன் (கலை) B2C
செல்வி க.கிருபாலோஜினி (கலை) 3C

**விளையாட்டுத்துறையில் மாகாண மட்டத்தில் தெரிவாகி தேசிய மட்டத்திற்குத் தகுதியானவர்கள்**

1. செல்வன் நா. சுமன் (15 வயதின் கீழ்)
   100 மீற், 200 மீற். மாகாண மட்டம் 1ஆம் இடம்
2. செல்வி சு. றேமியா (15 வயதின் கீழ்)
   தட்டெறிதல் மாகாணமட்டம் 1ஆம் இடம்
   குண்டெறிதல் மாவட்ட மட்டம் 2ஆம் இடம்
3. செல்வி. க. கல்ப்பனா (15 வயதின் கீழ்)
   ஈட்டியெறிதல் மாவட்ட மட்டம் 2ஆம் இடம்
4. செல்வன் பா. சானுயன் (17 வயது)
   400 மீற்றர் தடை மாகாணமட்டம் 2ஆம் இடம்
5. செல்வன் கு.குருசாந்த் (21 வயது)
   உயரம் பாய்தல் மாவட்டமட்டம் 3ஆம் இடம்
6. செல்வி ஜெ.மயூரா (21 வயது)
   100 மீற்றர் தடை மாவட்ட மட்டம் 1ஆம் இடம்
7. செல்வன் க.கஜந்தன் பளு தூக்குதல் மாகாணமட்டம் 2ஆம் இடம்
8. செல்வன் மு.கயீகரன் கராத்தே மாகாணமட்டம் 3ஆம் இடம்
9. செல்வன் நா. மனோகரன் கராத்தே மாகாண மட்டம்3ஆம் இடம்
10. செல்வன் சி.சிவராஜா கராத்தே மாகாண மட்டம் 1ஆம் இடம்
11. செல்வன் பொ.ஜெசிந்தன் கராத்தே மாகாண மட்டம் 3ஆம் இடம்
12. 13 வயதுஆண் 4× 100 அஞ்சல் மாவட்ட மட்டம் 1ஆம் இடம்
    15 வயது பெண் 4×400 அஞ்சல் மாவட்ட மட்டம் 1ஆம் இடம்

தேசிய மட்ட ஜோன்ராப்பெற் மெய்வல்லுநர் போட்டி -2012
செல்வன் நா. சுமன் 14 வயதின் கீழ்
100 மீற் 3ஆம் இடம் (வெண்கலப்பதக்கம்),200 மீற் 2ஆம் இடம் (வெள்ளிப்பதக்கம்)

வாழ்த்துவோர்:
அதிபர் ,ஆசிரியர்கள் OSU, SDS,SDC
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
(807)


## நவராத்திரிவிழா

தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், ஆதிமுத்துமாரியம்மன் தேவஸ்தானம், சக்தி முன்பள்ளி, சக்தி விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமைமாலை 6.30 மணிக்கு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஜங்கரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3)


**Cambridge Management College**

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.
மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.
6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**Cambridge Management College**
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கே.ஆர். ராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தலைவர் பேராசிரியர் கே. கந்தசாமி, சிறப்பு விருந்தினராக வடமாகாண நீர்ப்பாசனத்துறை பொறியியலாளர் செல்வி கோபிகா சிவகடாட்சம், கௌரவ விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அலுவலர் பாலசுப்பிரமணியம் சயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)


**மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 2<br>உயரம்:-5'9"<br>கி.பா:-11.5<br>தகைமை:-A/L சவுதி Sasco Company Manager<br>B/620 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-5.25<br>தகைமை:- Bsc in Agriculture Pragra mme Assistant<br>G/617 |
| பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரேவதி<br>உயரம்:-5'7"<br>கி.பா:-3.75<br>தொழில்:-Doctor USSR (Jaffna)<br>B/619 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 1<br>உயரம்: 5'<br>கி.பா:-6.75<br>தகைமை: A/L<br>G/618 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவோணம் 1<br>உயரம்:-6'7"<br>கி.பா:-34.25<br>தகைமை:- A/L, Computer கனடா PR)<br>B/104 | பிறப்பு:- 1979 RC வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 24.5<br>தகைமை:- A/L, Computer<br>G/102 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-புனர்பூசம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-14.5<br>தொழில்:-Network Engineer<br>B/108 | பிறப்பு:- 1972 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 47.5<br>தகைமை:-A/L<br>G/608 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அரசாங்கத்தின் காலத்தில் இனப்பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

**தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு 13 ஆவது தீர்வு காண்பதற்கு கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 57 ஆவது பொதுக்கூட்டம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்த கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு 13 ஆவது திருத்தச்சட்டமூலம் பொருத்தமானதென்றும் குறிப்பிட்ட அவர் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ முன்மொழிந்திருக் கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொண்டு தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் சிறந்ததொரு முறை. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் விவாதங்களை நடத்தி தீர்மானிக்க முடியும்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆர்வம் காட்டவில்லை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமது இந்த நடைமுறையை கைவிட்டு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொண்டு தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆராயமுடியும். இத் தெரிவுக் குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்களை 6 மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிமொழி வழங்கியுள்ளார்.

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்த காலத்திலேயே கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், தற்பொழுது இந்த அச்சுறுத்தல் இல்லை.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து அரசாங்கம் உள்ளிட்ட சகல கட்சிகளுடனும் விரிவான விவாதங்களை நடத்த முடியும்.

அதேநேரம் நாட்டிலுள்ள வறிய மக்களுக்கு உதவும் வகையில் அரசாங்கம் கொண்டு வரும் திவிநெகும திணைக்கள சட்டமூலத்திற்கு எதிராக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் நீதிமன்றம் சென்றுள்ளனர்.

அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களால் மக்கள் நன்மையடைந்தால் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் போய்விடும் என்பதற்காகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இச்சட்டமூலத்தை எதிர்க்கின்றனர்.

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்த ஒரே நாட்டுத்தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவருடைய ஆட்சிக்காலத்திலேயே தேசிய பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அபிவிருத்திகளை காட்டிலும் தமது அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலேயே உறுதியாகவுள்ளனர். எனவே, அவர்களுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். (அ-2)



வேலணையூர் பண்டிதை த.வேதநாயகியின் ஆக்கங்கள், ஆராய்ச்சி தொடர்பான நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.ஆரூரன் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# பழைய மின்கம்பங்களை அகற்றுமாறு கோரிக்கை

(ஆனையிறவு)

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் மின்சார சபையினராலும் சிறிலங்கா ரெலிகொம்மினாலும் நாட்டப்பட்ட பழைய மின்கம்பங்கள் அகற்றப்படாது புதிய மின்கம்பங்கள் நாட்டப்பட்டமையால் பயணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு பழைய மின்கம்பங்கள், தற்போது நாட்டப்பட்ட மின்கம்பங்கள் மேற்குறித்த வீதியில் உள்ளமையால் பயணத்திற்கு இடையூறு உள்ளது. எனவே, உரியவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து பழைய மின்கம்பங்களை அகற்ற வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# ஈழப்பிரச்சினையை சர்வதேசம் முற்றாக மறந்து வருகின்றது

## பி.பி.சி செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவிப்பு



தமிழர்களின் அவலங்களை வெளிக்கொணர எனது புத்தகம் உதவும் என்ற நம்பிக்கையிலேயே எனது புத்தகத்தை எழுதினேன். இது நான் தமிழர்களுக்கு செய்யும் ஒரு கடமையாக நினைக்கிறேன். ஆனால் சர்வதேச சமூகம் ஈழப்பிரச்சினையை முற்றாகவே மறந்து வருவதை தமிழர்களாகிய நீங்கள் உணர வேண்டும் என பிபிசி முன்னாள் நிருபர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கனடா ரொறன்டோவில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு முன்னைநாள் பிபிசியின் இலங்கைக்கான நிருபரான பிரான்ஸிஸ் ஹரிசன் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

**இன்னமும் எண்ணப்படும் சாவுகள்** என்ற புத்தகத்தை எழுதிய இவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கான தனது முதல் விஜயம், அவர்களுடனான தொடர்பு, குறிப்பாக சமாதான செயலக பணிப்பாளரான புலித்தேவனுடனான தனது தொடர்பு குறித்து விரிவாக விபரித்தார்.

நவீன தொலைத்தொடர்பு உலகிற்கு தன்னை இட்டுச் சென்றார்களே புலிகள் என்றும் ஸ்கைப் என்ற தொடர்பாடலை தான் அவர்களின் மூலமாகவே உபயோகப்படுத்த கற்றுக்கொண்டதாகவும் தெரிவித்த பிரான்ஸிஸ் ஹரிசன் இறுதிப்போரின் கடைசி 6 மாத காலத்திலும் புலிகளும் அவர்கள் சார்ந்த மக்களும் சந்தித்த பேரவலங்கள் உலகிற்கு தெரியவில்லை என்பதே தனது ஆதங்கம் எனக் குறிப்பிட்டார்.

உலகம் மாறிக் கொண்டேயிருக்கிறது. இப்போது காசா பற்றியும் இஸ்ரேல் பற்றியும் பேசுகிறார்கள். நாளை இன்னொரு பிராந்தியத்தை பற்றிப் பேசுவார்கள்.

சர்வதேசம் இலங்கை அரசைத் தண்டிக்கும் என நான் மிகவும் நம்பியிருந்தேன். ஆனால் ஐக்கிய நாடுகள் அவை மற்றும் சர்வதேச தீர்மான சக்திகள் போன்றவை இலங்கை அரசை தட்டிக் கொடுத்து வருகின்றன என்பதை தான் உணர்வதாகவும் அவர் கூறினார்.

தனது புத்தகம் குறித்த கருத்துப்பதிவுகளிலே புலம்பெயர்ந்த தேசத்தை தமிழர்கள் சிலர் தனது புத்தகத்தை கடுமையாக விமர்சித்துள்ளதாகவும் இது தனக்கு பெருத்த ஏமாற்றத்தை அளிப்பதாகவும் தெரிவித்த அவர் தனது புத்தகம் உலகிற்கு எதைத் தெரிவிக்க வேண்டுமென எழுதப்பட்டதோ அந்த விவகாரம் உலகத்தால் மறக்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை புலம்பெயர்ந்த தமிழர்கள் உணர வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

தான் புத்தகம் எழுதுவதை அறிந்த சில பிரபலங்கள் இலங்கை விவகாரத்தை பற்றி எழுதுகிறீர்களா? அதற்கு என்ன இப்போ முக்கியம் எனக் கேட்டதையும் நினைவு படுத்திய அவர் காலம் மாறிவருவதை கருத்திற் கொண்டு இன்னமும் எண்ணப்படும் இறப்புக்களுக்கான நியாயத்தை தமிழர்கள் இப்போது தேடாவிட்டால் நிச்சயமாக இந்த விவகாரம் பத்தோடு பதினொன்றாக காணாமற் போய் விடும் என்று தனது கவலையையும் பதிவு செய்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பாடசாலைகளை கண்காணிப்புக்குட்படுத்துங்கள்

## அனோமா திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் காணப்படுகின்ற சர்வதேச பாடசாலைகளை கண்காணிப்புக்கு உட்படுத்துமாறு இலங்கை சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு அதிகாரசபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சிடம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளதாக குறித்த அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படுகின்ற அதிக அளவான சர்வதேச பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அனைத்து பாடசாலைகளையும் இது தொடர்பில் கல்வி அமைச்சு கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# அமைச்சர்களை சுற்றிய மோட்டார் சைக்கிள்

## பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வு ஒன்றில் இனந்தெரியாத நபர் ஒருவர் அனுமதியின்றி மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்றுள்ளார்.

வாகனங்கள் பிரவேசிக்க முடியாத வகையில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துள்ளார்.

கோத்தபாய, பசில் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அமர்ந்திருந்த மேடைக்கு அருகாமையில் சென்ற இந்த மோட்டார் சைக்கிளையும் அதில் பயணம் செய்த நபரையும் இதுவரையில் பொலிஸார் கைது செய்யவில்லை.

மிக வேகமாக குறித்த நபர் மோட்டார் சைக்கிளை செலுத்தியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# உறுப்புரிமை இழந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்க கோரிக்கை

## ஐ.தே.க. உறுப்பினர் சிலர் முடிவு

(கொழும்பு)

சரத் பொன்சேகா தலைமையில் அண்மையில் ஹைட் பார்க் மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுப் பேரணியில் கலந்து கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பல உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டது.

3 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2 மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் 15 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையும் கட்சித் தலைமையால் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டன.

இந்த நிலையில் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் கட்சித் தலைமையிடம் விண்ணப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் குழு ஒன்று தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மீளமைப்பு குழுவின் உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பிலான கடிதம் ஒன்றை கட்சியின் சில உறுப்பினர்களின் கைச்சாத்துடன் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் வழங்க நடவடிக்கை எடுக்க விருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உலக அழகி போட்டியில் இலங்கையருக்கு 3 ஆம் இடம்

(கொழும்பு)

உலக அழகுப் போட்டியில் கலந்து கொண்ட இலங்கையரான மதுஷா மாயாதுன்னே மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

ஜப்பானிய ஒக்கினாவிவாவில் நடைபெற்ற 54 ஆவது உலக அழகிப் போட்டியில் இந்த முறை ஜப்பானிய அழகிக்கு முதலாம் இடம் வழங்கப்பட்டுள்ளது. பின்லாந்தின் அழகி இரண்டாம் இடத்தை பெற்றார்.

உலக நட்புக்கான அழகியாக மொரிசியஸ் தீவை சேர்ந்த அழகி தெரிவு செய்யப்பட்டார். (அ-2)

# 2012.10 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1157-டென்மார்க்கில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. மன்னன் மூன்றாம் சுவெயின் கொல்லப்பட்டு முதலாம் வால்டிமார் அரசனானான்.

★1707-பெரிய பிரித்தானியாவின் முதல் நாடாளுமன்றம் கூடியது.

★1739-பிரித்தானியப் பிரதமர் ரொபேர்ட் வால்போல் ஸ்பெயின் மீது போரை அறிவித்தார்.

★1870-பிரான்சின் மெட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இறுதிப் போரில் பிரஷ்யா வெற்றியடைந்தது.

★1906-அல்பேர்ட்டோ சாண்டோஸ் - டுமொண்ட் பாரிஸ் நகரில் ஐரோப்பாவின் முதலாவது காற்றைவிடப் பாரமான வானூர்தியைப் பறக்க விட்டார்.

★1911- முற்தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது. இத்தாலிய வானோடி லிபியாவில் இருந்து புறப்பட்டு துருக்கிய இராணுவ நிலைகளை அவதானித்தான்.

★1912-முதலாம் பால்க்கன் போர்: சேர்பியாவுக்கும் ஒட்டோடான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

★1917-லெனின் ஒக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

★1941-உக்ரேனின் ஒடேசா நகரில் 19 ஆயிரம் யூதர்கள் ருமேனிய இராணுவ அதிகாரி நிக்கலாய் டெலியானு தலைமையில் ருமேனியா மற்றும் ஜேர்மனி படையினரால் உயிருடன் எரிக்கப்பட்டனர். அடுத்த நாள் மேலும் 10 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.

★1942-ஐக்கிய அமெரிக்க வான்படையின் தாக்குதலுக்கு அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்று இலக்கானதில் அதில் பயணம் செய்த 12 பேரும் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் ரால்ஃப் ரைஞ்சர் என்ற பிரபலமான இசை மேதையும் அடங்குவார்.

★1944-இரண்டாம் உலகப் போர்: மிகப் பெரும் கடற்படைப் போர் பிலிப்பைன்சில் ஆரம்பமாகிற்று.

★1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத்தின் செம்படைகள் ஹங்கேரியை அடைந்தன.

★1946- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதலாவது கூட்டத் தொடர் நியூயோர்க் நகரில் ஆரம்பமானது.

★1956-ஹங்கேரியப் புரட்சி 1956: ஹங்கேரியில் பல்லாயிரக்கணக்கானோர் அரசுக்கு எதிராகவும் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர். ஹங்கேரியப் புரட்சி நவம்பர் 4 இல் நசுக்கப்பட்டது.

★1958-நோவா ஸ்கோசியாவில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 174 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் சிக்கினர். இவர்களில் 100 பேர் மட்டும் நவம்பர் முதலாம் திகதி வரையில் மீட்கப்பட்டனர்.

★1973-சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்ற யோம் கிப்பூர் போர் ஐ.நாவின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்தது.

★1983-லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 241 அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டனர். அதே நாளில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் பிரெஞ்சு இராணுவத்தினர் 58 பேர் கொல்லப்பட்டனர்.

★1989-கம்யூனிச ஹங்கேரியன் மக்கள் குடியரசு ஹங்கேரியன் குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.

★1998- இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டனியாகு மற்றும் பாலஸ்தீன தலைவர் யாசர் அரபாத்துக்கும் இடையில் அமைதிக்கான நிலம் என்ற உடன்பாடு எட்டப்பட்டது.

★2001- வட அயர்லாந்தில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களின் பின்னர் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதக் களைவில் ஈடுபட்டது.

★2001-அப்பிள் நிறுவனத்தின் ஐப்பொட் வெளியிடப்பட்டது.

★2001-காஷ்மீர் விமானத் தளத்தை தகர்க்கும் தீவிரவாதிகளின் தற்கொலைப் படைமுயற்சி முறியடிக்கப்பட்டது. 4 தீவிரவாதிகள் மற்றும் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டனர்.

★2002-மொஸ்கோவில் நாடக அரங்கு ஒன்றில் செச்னிய தீவிரவாதிகளினால் 700 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

★2004- பிரேசில் VSB-30 என்ற தனது முதலாவது விண்கப்பலை விண்ணுக்கு ஏவியது.

★2004-வடக்கு ஜப்பானில் நிலநடுக்கம் தாக்கியதில் 35 பேர் கொல்லப்பட்டு 2 ஆயிரத்து 200 பேர் படுகாயமடைந்தனர்.

★2006- இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

### பிறப்புக்கள்

1920-ஃவுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (இ.1998)

1948-எம்.எச்.எம். அஷ்ரப், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தாபகர் (இ.2000)

1974-அரவிந்த் அடிகா, இந்தியப் புதின எழுத்தாளர்


### இறப்பு

1989-எட்வேர்ட் அடெல்பேர்ட் டொய்சி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவென்சா H1N1 (Influenza H1N1)

## பன்றிக் காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி



இன்புளுவென்சா H1N1 என்பது புளு (Flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந்நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற்றும் இருமும் போது வெளியேறும். கிருமிகள் மூலம் தொற்றுகிறது. இந்நோய் முன்னர் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தால் இப்பொழுது பன்றிக்காய்ச்சல் என்றழைக்கப்படுவதில்லை. இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோய் ஆகையால் பெரும்பாலான மக்கள் இந்நோய்க்கான எதிர்ப்பு சக்தியை கொண்டிருப்பதில்லை. ஆகவே, இந்நோய் மிகவும் வேகமாக பரவி வருகின்றது. இது சிறு பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாக பரவுகின்றது.

குணங்குறிகள்

பொதுவாக இது ஒரு சாதாரண நோயாகும். ஆகவே, தேவையற்ற பதற்றம் அடையத் தேவையில்லை. பொதுவான குணங்குறிகளாவன:

1. காய்ச்சல்
2. தலையிடி
3. உடல் வலி
4. தொண்டை வலி
5. இருமல்
6. மூக்கிலிருந்து சளி வடிதல்
7. சிலவேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

இது சாதாரண தடிமன் போன்றது. ஆகவே, மற்றைய இன்புளுவென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பது கடினமானது. இந்நோய் சில நோயாளிகளிலிருந்து நியூமோனியா காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. இவ்வாறு நியூமோனியா காய்ச்சலாக மாறுமிடத்து மூச்சு விடுதல் கடினமாக இருக்கும். மேலும் கடுங்காய்ச்சலாக காணப்படக் கூடும். அல்லது காய்ச்சல் காணப்படாமலும் நோய் கடுமையாகும்.

**மேற்கூறிய குணங்குறிகள் காணப்படின் செய்யப்படவேண்டியவை**

1. குணங்குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல்

2.சன நெருக்கடி மிகுந்த இடங்களை தவிர்த்தல். இது நோய் பரவுதலை தடுக்கும்.

3. போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள்ளுதல்.

4. குடும்ப வைத்தியரிடம் குணங்குறிகளுக்கான வைத்திய ஆலோசனை பெறுதல். சாதாரண நோய்க்கு விசேட வைத்திய சோதனைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் முதலியன தேவையில்லை.

5.சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல்

6.தும்மும் போதும் இருமும் போதும் கைக் குட்டையை உபயோகித்தல், பேப்பர் டிசு (Tissue) உபயோகிப்பின் அதை உரிய முறையில் அகற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை உபயோகிக்கக் கூடாது. கைகளின் மூலம் மற்றைய இடங்களை தொடும் போது இவ்வைரஸ் மற்றைய இடங்களுக்கும் பரவக்கூடும்.

7. அரிதாக சிலரில் இந்நோய் முற்றி நியூமோனியாவாக மாறக்கூடும் அல்லது வலிப்பு ஏற்படக்கூடும். மேலும் தடுமாற்றம், மாறுபட்ட விழிப்புணர்வு ஏற்படக்கூடும்.

கீழ்க் காணப்படும் குணங்குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

- கடுங்காய்ச்சல்
- மூச்சுவிடுதல் கடினமாதல்
- மாறுபட்ட விழிப்புணர்வு
- குணங்குறிகளின் கடுமை அதிகரித்தல்
- உடல் சோர்வு

**இந்நோய்க்கு சிகிச்சை உண்டா**

இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமாகும். ஆகவே, எல்லோரும் பதற்றப்படவோ வைத்திய சோதனைகள் செய்யவேண்டிய அவசியமோ இல்லை. இந்நோய் கடுமையாகுமிடத்து அதை எதிர்கொள்ள தேவையான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. ஆகவே, இது குறித்து கவலையடையத் தேவையில்லை.



***அதிக கவனம் எடுக்க வேண்டியவர்கள் யார்?***

***கடுமையாக நோய் வாய்ப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளவர்கள்.***

- 2 வயதிற்கு உட்பட்டவர்கள்
- 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- கர்ப்பிணிகள்
- நீரிழிவு, ஆஸ்துமா, சிறுநீரக நோய், புற்றுநோய், உள்ளவர்கள் பிரட்னிசலோன் (Prednisolone) மருந்து நீண்ட காலமாக பாவிப்பவர்கள்.

ஆகவே, நீங்கள் மேற்குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராயின் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

**இந்நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி**

1.சன நெருக்கடி மிகுந்த இடங்களை தவிர்த்தல்

2.சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கை கழுவுதல்

3.வாய் மற்றும் மூக்கு பகுதிகளை தேவையின்றி தொடுவதை தவிர்த்தல்

4. மூக்கால் நீர் /சளி வடியும் நோயாளிகளிடமிருந்து குறைந்தது ஒரு மீற்றர் தூரம் தள்ளி நிற்றல்

5. வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஜன்னல்களை திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்தல்

6. Mask உபயோகிப்பின் மூக்கையும் வாயையும் மூடக் கூடியதாக சரியான முறையில் அணியப்பட வேண்டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும்.

நோய் தொற்று தலை தவிர்க்க ஒரு சுகதேகி Mask அணிவதை பார்க்கிலும் நோயாளி நோய் பரவுதலை தடுக்க Mask அணிவது சிறந்தது.

Dr. இ.தெய்வேந்திரன்
பணிப்பாளர்,
நியூ யாழ்.வைத்தியசாலை.

# உழ்ஹிய்யா கடமைகளை போயாவில் நிறைவேற்ற வேண்டாம்

## உலமா சபை அறிவிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் 29 ஆம் திகதி திங்கட்கிழமை போயா தினமாகையினால் உழ்ஹிய்யா கடமைகளை நிறைவேற்ற வேண்டாம் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை அறிவித்துள்ளது.

மாற்று மதத்தவரின் மனதினை நோகடிக்கா வண்ணமும் நாட்டின் சட்டத்தினை மீறாத வகையிலும் இந்த உழ்ஹிய்யா கடமைகளை நிறைவேற்றுமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் அய்யாமுத் த்ஷ்ரீக்குடைய இரண்டாம் நாளான ஒக்டோபர் 29 ஆம் திகதி திங்கட்கிழமை போயா தினமாக இருப்பதனால் அன்றைய தினம் உழ்ஹிய்யா கடமைகளை முற்றாக தவிர்த்து நாட்டு சட்டத்தை முற்றாக பேணி நடக்குமாறும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வேண்டியுள்ளது.

இதனால் பெருநாள் தினமான சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் உழ்ஹிய்யா கடமைகளை நிறைவேற்றுமாறும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை அறிவித்துள்ளது. (எ-11)



யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலையின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள் மாலை அணிவித்து வரவேற்கப் பட்டதைப் படத்தில் காணலாம்.

# யுத்தத்திற்கு பின்னர் 9 இலட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

## அகற்றிய குழுவுக்கு அமெரிக்காவில் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான போர் முடிந்த பின் ஒன்பது இலட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த கடின பணியை மேற்கொண்ட குழுவுக்கு அமெரிக்காவில் மார்ஷல் லெகசி இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனம் விருது வழங்கி கௌரவித்தது. இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரச இராணுவத்துக்கும் இடையே நடந்த போர் கடந்த 2009 இல் முடிந்தது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த போரின் போது விடுதலைப் புலிகள் இராணுவத்தை தடுக்க தங்கள் கட்டுப் பாட்டில் இருந்த பகுதிகளில் கண்ணிவெடி களை புதைத்தனர்.

போர் ஓய்ந்த நிலையில் தற்போது இந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 5 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவில் 80 சதவீத கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விட்டதாக இலங்கை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களை சிதைக்கும் ஐந்து இலட்சம் கண்ணிவெடிகளும் பீராங்கிகளை தகர்க்கும் ஆயிரத்து 500 கண்ணிவெடிகளும் தொட்ட உடனே வெடிக்கும் நான்கு இலட்சம் கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன.

கண்ணிவெடி அகற்றும் குழுவில் இந்திய நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. உயிருக்கு அச்சுறுத்தலான இந்த கடின பணியை செய்ததற்காக டி.கே.எ[illegible] ரோகன் தலைமையிலான கண்ணிவெடி அகற்றும் குழுவுக்கு கடந்த 10 ஆம் திகதி அமெரிக்காவில் மார்ஷல் லெகசி இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனம் விருது வழங்கி கௌரவித்தது.

அத்துடன் கண்ணிவெடிகளை கண்டறியும் பயிற்சி பெற்ற 26 மோப்ப நாய்களும் இந்த குழுவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (அ-2)

# பண்ணிசை வகுப்புக்கள்

அகில இலங்கை திருமுறைமன்றம் நடத்திவரும் தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/ இந்து மகளிர் கல்லூரியிலும் பிற்பகல் 4 மணிக்கு யாழ். சிவதொண்டன் நிலையத்திலும் மாலை 5.30 மணிக்கு யாழ். சிவதொண்டன் நிலைய கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரமத்திலும் நடைபெறவுள்ளது.

வட இலங்கைச் சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானங்களுக்கமைவாக துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்தியினால் நடத்தப்படவுள்ள இவ்வகுப்பில் புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

79

மீண்டும் சந்திரபானு

...கிராமங்கள் தன்னிறைவாக விளங்கின. மக்களது தேவைகள் குறைவு, உப்பு, உடுபுடவை, கருவிகள், பண்டமாற்றின் மூலம் பெறப்பட்டன. வணிகப் பரிமாற்றத்திற்கு மஸ்ஸ, கஹவணு என்னும் நாணயங்களும் சீன நாணயங்களும் உபயோகிக்கப்பட்டன. யானை, தந்தம், இரத்தினங்கள், முத்துக்கள் என்பன வெளிநாட்டு வர்த்தகத்தில் இடம்பிடித்தன. குதிரைகள், பீங்கான் பொருட்கள், துணுமணிகள் என்பன இறக்குமதி செய்யப்பட்டன. ஊறாத்துறை, மாந்தோட்டை, திருகோணமலை என்பன முக்கிய துறைகளாக விளங்கின. இலங்கையின் கைத்தொழிற் பொருட்கள் என போர் உபகரணங்களை உற்பத்தி செய்யும் உலோகக் கைத்தொழில், புத்தர் சிலைகள், தெய்வ உருவங்கள், விளக்குகள் என்பனவற்றினை உற்பத்தி செய்யும் வெண்கலக் கைத்தொழில், தச்சுத் தொழில் வீடுகட்டல், வீட்டுப் பொருட்கள் என்பன மரத்தினால் செய்யப்பட்டன. செங்கல் வேலைகள் தெரிந்த கட்டிட வல்லுனர் இருந்தனர். இரத்தினக்கல் அகழ்தல் சுரங்கத் தொழில் இருந்தது. ஆபரணங்கள் செய்யப்பட்டன.


பொலநறுவை நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள இந்து ஆலயச் சின்னங்கள்



கருங்கல்லில் செதுக்கப்பட்ட விநாயகர் சிலை



உலோகத்தால் வார்க்கப்பட்ட விநாயகர் சிலை




உலோகத்தால் வார்க்கப்பட்ட நடராஜர் சிலை



கருங்கல்லில் செதுக்கப்பட்ட தட்சிணாமூர்த்தி சிலை

## கலிங்கத்து மாகன்

பொலநறுவைக்காலத்துக் கட்டிடங்கள் மதச்சார்பானவை. அவை இரு வகைப்படும் பௌத்தமதக் கட்டிடங்கள் இந்து மதக் கட்டிடங்கள். பௌத்தமதத் தூபிகளான கிரிவிகாரை, ரன்கொத் விகாரை என்பன முக்கியமானவை. இவ்விரு விகாரைகளும் குமிழ் வடிவின. தமிழ்க் கைதிகளைக் கொண்டு பராக்கிரமபாகு கட்டுவித்த தெமிழமகாசாயா தாதுகோபம் தாமரை வடிவானது. பொலநறுவையில் காணப்படும் ஏழடுக்கு மாளிகை எனப்படும் சத்மகால்பிரசாதய என்ற தூபி வேறுபாடானது. இதுமேலே செல்லச்செல்ல சிறிய ஏழு அடுக்குகளைக் கொண்டு சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அடுக்குச் சுவர்களிலும் காணப்படும் வில்வளைவுகளில் தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன. பொலநறுவையிலுள்ள மிகச்சிறப்பான கட்டிடம் வட்டதாகே மனையாகும் (வட்டதாமனை). இதன் ஒவ்வொரு பகுதியும் அழகான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. தூபிகளின் நான்கு பக்கங்களிலும் நுழைவாயில் அமைப்புள்ளது. அவற்றினை வாகல்கட என்பர். அவற்றின் இரு பக்கங்களிலும் புத்தர் சிலை மாடங்கள் உள்ளன. சிலாமனைகள் பொலநறுவைக்காலத்தில் மிக முக்கியம் பெற்றிருந்தன. லங்காதிலக விகாரை, தூபராம விகாரை, திவங்க சிலாமனை என்பன இவற்றில் முக்கியமானவை. இவை செங்கற்களினால் கட்டப்பட்டுள்ளன. லங்காதிலக விகாரயையின் உட்புறங்களிலும் திவங்க சிலாமனையிலும் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. பொலநறுவை அரச மாளிகை, பராக்கிரமபாகுவின் சபா மண்டபம், நிசங்கமல்லனின் லதா மண்டபம் என்பன குறிப்பிடத்தக்க கட்டிடங்களாகும். நிசங்கமல்லனின் லதா மண்டபத்தில் அரசனுடைய சிங்காசனம், கல்லிற் செதுக்கப்பட்ட ஒரு சிங்கத்தின் மேல் இருக்கின்றது. பொலநறுவையிலுள்ள இரு தடாகங்கள் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகவுள்ளன. பொலநறுவையிலுள்ள நீள் சதுர வடிவிலான குமாரபொக்கனை, தாமரைப் பொய்கை என்பன அவையாம். இந்த மதக்கட்டிடங்கள் பல பொலநறுவையிலுள்ளன. ஏழு சிவதேவாலயங்கள், விஷ்ணு தேவாலயம், விநாயகர் கோயில்கள் என்பன சிதைந்த நிலையில் அங்குள்ளன. ஆவுடையார், லிங்கம், பொதிகை, கோமுகி முதலான இந்து மதச்சின்னங்களைப் பொலநறுவையில் பரக்கக் காணலாம். முதலாம் சிவதேவாலயமும் இரண்டாம் தேவாலயமும் ஓரளவு சிதைவுறாதுள்ளன. இவை முற்றிலும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. இவை சோழர்காலக் கட்டிடங்களாகும்.



சோழர்கால சிதைவடைந்து காணப்படுகின்ற சிவதேவாலயம்- பொலநறுவை



சோழர்கால கருங்கற்களால் கட்டப்பட்ட 2-ஆம் சிவதேவாலயம்- வானவன் மாதேவி ஈஸ்வரன் கோவில்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

பொலநறுவைக்கால சிற்பக்கலை குறித்த நோக்கில் புத்தர் சிலைகளைச் செதுக்குவது அக்காலச் சிற்பக் கலையில் முக்கிய அம்சமாகக் காணப்பட்டுள்ளது. உத்தராராமயா எனப்படும் கல்விகாரையில் மூன்று சிலைகளுள்ளன. ஒரே பாறைத் தொடரில் அவற்றினைச் செதுக்கியுள்ளார். 14 மீற்றர் நீளமான சயன புத்தர், தியானபுத்தர், நிற்கும் புத்தர் என அவை அமைக்கப்பட்டுள்ளன. மகா பராக்கிரமபாகு மன்னனைப் பொத்கல் விகாரை அருகில் சிலையாகச் செதுக்கியுள்ளனர். பொலநறுவையில் உலோகச்சிலைகள் பல ஆலயங்களில் இருந்துள்ளன. நடராஜர் சிலைகள், பார்வதி சிலை, தட்சிணாமூர்த்தி சிலை, விநாயகர் சிலை என்பன உலோகத்தில் வார்க்கப்பட்டுள்ளன. அவை இன்று பொலநறுவை அரும்பொருட் காட்சியகத்தில் உள்ளன. சந்திர வட்டக்கற்களை பொலநறுவையில் காணலாம். அனுராதபுரச் சந்திரவட்டக்கற்களில் சிங்கம், எருது, யானை, குதிரை ஆகிய விலங்களின் உருவங்களைக் காணலாம். ஆனால், பொலநறுவைக்காலச் சந்திரவட்டக் கற்களில் எருதின் உருவம் காணப்படுவதில்லை. எருது சைவ மக்களின் வணக்கத்திற்குரிய விலங்கு என்பதால் கால் மிதிக்கும் பொலநறுவைக் காலச் சந்திரவட்டக் கற்களில் காணப்படுவதில்லை. பொலநறுவையிலுள்ள வட்டதாகே, அரசமண்டபம் போன்ற கட்டிடங்களின் படிவரிசைகளின் இருபக்கங்களிலும் துவாரபாலகர் உருவர் செதுக்கப்பட்டிருக்கும்.

பொலநறுவைக்காலத்தில் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் சமூகத்தில் பழகுமொழிகளாக இருந்தன. வடமொழிச் செல்வாக்கினால் அனுராதபுரச் சிங்களம் சற்று வேறுபட்டிருந்தது. அதைப்போலப் பொலநறுவைக்காலச் சிங்களம் இருக்கவில்லை. மவதெல்தாவத், சசதாவத் ஆகிய இரண்டு சிங்கள காவியங்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. புத்சரண என்பது உரை நடையில் எழுதப்பட்ட இலக்கியமாகும். வடமொழி கலந்த சிங்களத்தில் பெரியதொரு கல்புத்தகம் (கதிககாவத்த) பொலநறுவையிலுள்ளது. புத்த சங்கத்தில் எடுக்க வேண்டிய சீர்திருத்தங்களைப் பராக்கிரமபாகு இதில் பொறிப்பித்தான். தமிழ்ச் சாசனக் கல்வெட்டொன்றும் இது காணப்படும் வளாகத்தில் காணப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுத் திட்ட பிரச்சினைகள் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும்

## தந்தை செல்வாவின் மகன் தெரிவிப்பு



(கொழும்பு)

தந்தை செல்வா என்று அழைக்கப்படும் எஸ். ஜே.வி. செல்வநாயகத்தின் மகன் சந்திர ஹாசன் சுமார் 30 ஆண்டுகளாக தமிழ கத்தில் வசித்து வருகிறார். இலங்கையிலி ருந்து யுத்த காலத்தில் வெளிநாடுகளுக்கு அகதிகளாக சென்றவர்கள் நாடு திரும்புவதில் எவ்விதமான பாதுகாப்பு ரீதியான பிரச்சி னைகளும் இல்லை என்று இந்தியாவில் இல ங்கை அகதிகள் நலன் சார் விடயங்களில் ஈடுபட்டு வரும் தொண்டு நிறுவனமான ஈழ ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் தலைவர் எஸ் சி. சந்திரஹாசன் பி.பி.சி.க்கு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு திரு ம்பி சென்றுள்ள இலங்கை அகதிகள் 6 ஆயிரம் பேர் வரையில் தமக்கு அங்கு பாது காப்புப் பிரச்சனை இருப்பதாக உணரவி ல்லை. அவர்களுக்கு வாழ்வாதார பிரச்சினை களே இருக்கின்றன.

தமிழகத்தில் வாழ்கின்ற இலங்கைத்தமிழ் அகதிகள் சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல் வதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் த ம து அமைப்பு ஈடுபட்டுள்ளது.இரு நாட்டு அரசு களுடன் இதற்காக பேச்சு நடத்தி இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று உரு வாக்கும் முயற்சிகளிலும் தாம் ஈடுபட்டிருக் கின்றோம்.

தமிழகத்தில் சுமார் ஒரு இலட்சம் இலங் கைத் தமிழ் அகதிகள் வசிக்கின்றனர். அவர் களில் 70 ஆயிரம் பேர்வரையில் முகாம் களிலேயே தங்கியிருக்கின்றனர் என்று மேற் படி அமைப்பு கூறுகின்றது.21 ஆயிரம் பேர் இந்திய மண்ணில் பிறந்தவர்கள்.

கடந்த 1983 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற குடும்பங்களிலிருந்து சுமார் 21 ஆயிரம் பேர் இந்திய மண்ணில் பிறந்தவர்கள் என்றும் அவர்களில் தற்போது 16 ஆயிரம் பிள்ளை களுக்கு இலங்கை உயர்தானிகரகம் ஊடாக பிறப்பு சான்றிதழ்களை பெறவேண்டியுள்ளது.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் அண் மைய காலங்களில் கடல் மார்க்கமாக அவுஸ் ரேலியா செல்ல முயன்று பிடிக்கப்பட்டிருக்கி றார்கள்.இலங்கை உயர்தானியகரகத்தில் பிறப்பை பதிந்து பிறப்பு சான்றிதழ் பெறா தாவர்கள் நாடற்றவர்களாகும் நிலை இருப் பதால் அவர்களுக்கு பிறப்பு சான்றிதழ் பெற் றுக் கொடுத்து இலங்கைக் குடியுரிமையை உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது.

இதேவேளை மலையக பிரதேசங்களிலி ருந்து வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியேறி பின்னர் அங்கிருந்து யுத்தத்தால் இடம்பெயர் ந்து தமிழகத்துக்கு அகதிகளாக வந்த இந்திய வம்சாவளி தமிழர்களில் சுமார் 30 ஆயிரம் பேர்வரையில் முகாம்களில் இருக்கின்றார் கள். அவர்கள் வந்த காலத்தில் நாடற்ற வர்கள் நிலையிலிருந்தால் அவர்களுக்கு குடியுரிமை ஆவணங்களை பெற்றுக் கொடு க்க வேண்டியுள்ளது.

இதேவேளை இலங்கையில் வடக்கு கிழ க்கு பிரதேசங்களில் மக்கள் குடியிருப்பு காணி களில் இராணுவ முகாம்கள் அமைந்துள் ளதையும் அங்கு அரசியல் தீர்வுத் திட்ட முய ற்சிகள் முடங்கியிருப்பதையும் சுட்டிக் காட்டி தமிழோசை கேள்வி எழுப்பிய போது அந்தப் பிரச்சினைகள் அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமாக பேசித்தீர்க்கப்பட வேண்டும் என் றும் ஈழ ஏதிலிகள் மறுவாழ்வு கழகத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# அமைச்சர் வாசுதேவ அம்பாறைக்கு விஜயம்

தேசியமொழிகள் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இன்று செவ்வாய்க்கிழமை அம்பாறைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்றைய தினம் காலை அம்பாறை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் நீல்தஅல்விஸ் தலைமையில் இடம்பெறவு ள்ள அரச கரும மொழிகளில் சித்தி பெற்ற அரச உத்தியோகத்திர்களுக்கு சான்றிதழ் கள் வழங்கும் வைபவத்தில் அரச கரும மொழிகள் அமுலாக்கம் தொடர்பாக திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கரும மொழியை அமுல்படுத்தும் உத்தி யோகத்தர்களுடனும் கலந்துரையாட வுள்ளார். (அ-2)

# குடிநீர் கிணறுகளில் கழிவு எண்ணெய் கலப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியில் உள்ள குடிநீர் கிணறுகளில் கழிவு ஒயில் புகுவதினால் சுத்தமான குடி நீரைப் பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட் டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக கழிவு ஒயில் கிணறுகளில் புகுவது சம்பந்தமாக பிரேதச சபை, பிரேதச செயலகம்,பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உட்பட பல இடங்களில் முறைப்பாடு செய் தும், உடன டியாக நிலைமையை உணர்ந்து உரிய நடவ டிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.(எ-11)

# மனிதவுரிமை வழக்குகளை விசாரணைக்கு எடுக்கவும்

நாட்டில் காணப்படுகின்ற மனித உரிமை கள் தொடர்பிலான வழக்குகளை மாவட்ட நீதிமன்றங்களின் ஊடாக விசாரனைக்கு எடு த்துக்கொள்ளுமாறு இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத் துள்ளது.அதன் ஆணையாளர் பிரதீப மஹா னாம இந்த கோரிக்கையை முன்வைத்துள் ளார். தற்போது மனித உரிமைகள் சம்ப ந்தப்பட்ட வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றமே விசாரணைக்கு எடுத்துக் கொள் கிறது. இதனால் இந்த வழக்கு விசாரணை கள் என்பது தாமதமடைகின்றன.

எனவே இவற்றை அதன் தரநிலைகளின் அடிப்படையில் மாவட்ட ரீதியான நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் பட்ச த்தில் ,அந்த வழக்குகளை விரைவில் தீர்த் துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 150 பயணிகளின் உயிரை காப்பாற்றிய விமானி

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் இருந்து இலங்கை பயணிக்க இருந்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதை விமானி உரிய நேரத்தில் கண்டுபிடித்ததால் 150 பயணிகள் உயிர் தப்பினர்.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு நேற்று முன்தினம் மாலை 3.40 மணிக்கு விமானம் புறப்பட்டு செல்ல இருந்தது.

இதில் மொத்தம் 150 பேர் பயணம் செய்ய இருந்தனர்.பயணிகள் அனைவரும் அனை த்து சோதனைகளையும் முடித்துக் கொண்டு விமானத்தில் ஏறி அமர்ந்தனர்.

விமானம் புறப்படதயாரான போது ,விமா னி கடைசியாக விமானத்தை பரிசோதனை செய்தார். அப்போது விமானத்தில் தொழில் நுட்ப கோளாறு ஏற்பட்டிருப்பதை கண்டு பிடித்தார்.

உடனடியாக இதுபற்றி விமான நிலைய அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து விமானத்தில் இருந்த பயணி கள் அனைவரையும் கீழே இறக்கி பாதுகாப்பு பகுதியில் தங்கவைக்கப்பட்டனர்.

விமானி உரிய நேரத்தில் கோளாறுகளை கண்பிடித்து விட்டதால் பெரும் விபத்து தவிர் க்கப்பட்டது. இதனால் 150 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். (அ-2).

# கே.பி.யின் விடுதலை தொடர்பில் பாராளுமன்றில் கேள்வி எழுப்பப்படும்

## ரவி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன் னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தொடர்பில் பாராளு மன்றில் கேள்வி எழுப்பப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன் விடுதலை செய் யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகிய நிலை யிலேயே பாராளுமன்றில் கேள்வி எழுப் படும் என அவர் தெரிவித்துள்ளளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குமரன் பத்மநாதனை நீதிமன்றில் ஆஜர்படுத்த போதியளவு ஆதாரங்கள் கிடையாதுஎன அரசாங்கம் வெளியிட்டுள்ள கருத்து அதிர்ச் சியளிக்கிறது.

பொலிஸாரையும் பொதுமக்களையும் தமிழீழ விடுதலைப்புலிகள் கொலை செய் வதற்கு குமரன் பத்மநாதன் ஒத்துழைப்பு வழங்கினார் என்பது தெரிந்த விடயமே.

குமரன் பத்மநாதன் ஏன் சுதந்திரமாக செல்ல அனுமதிக்கப்பட்டார்?


அவர் தொடர்பில் விசாரணை நடத்தி பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என கடந்த ஆண்டு அரசாங்கம் வாக்குறுதி அளித்தது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன அரசாங்கத்தின் சார்பில் இந்த வாக்குறுதியை அளித்திருந்தார் என்றார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்துடன் தொடர் புடைய குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச பொலி ஸார்குமரன் பத்மநாதனுக்கு பிடி விறாந்து உத் தரவு பிறப்பித்துள்ளமை தெரிந்ததே. (அ-2)






அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உட்பட விருந்தினர்கள் நிற்பதையும் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாஸன், யாழ்ப்பாணம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரீ.வை ரவீந்திரன் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி கட்டடத்தினை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைரொய்டு நோயும் அதன் தாக்கங்களும்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இது தைரொய்டு நோய்கள் வராமல் அல் லது தீவிரமாகாமல் தடுத்துக் கொள்வதற்கும் பொருந்தும்.

நாளமில்லாச்சுரப்பிகளுள் மிக முக்கிய மானது தைரொய்டு சுரப்பி. இதில் சுரக்கும் தைரொக்சின் எனும் ஓமோன் உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி மற்றும் ஆண் பெண் உறுப்புகள் முதிர்ச்சி பெறுவதற்கு உதவுகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தைரொய்டு சுரப்பி கழுத்துப்பகுதியில் மூச்சுக் குழாய் பகுதிக்கு முன்பாக வண்ணத்துப் பூச்சி வடிவத்தில் அமைந்துள்ளது. தாயின் வயிற்றில் கரு உருவாகி 30 ஆவது நாளிலேயே தைராய்டு சுரப்பி உருவாகி விடுகிறது.

### தைரொய்டு சுரப்பி சீராக இல்லா விட்டால்


உடலில் தைரொய்டு சுரப்பி சீராகச் செயற்படாமல் போகும்போது உடல் நலப்பிரச்சினைகள் ஏற்பட ஆரம்பிக்கிறது. தைரொய்டு சுரப்பி செயற்பாட்டில் கோளாறு உருவானால் பல்வேறு நோய்கள் ஏற்படவாய்ப்பு உண்டு.

ஏனெனில் தைரொய்டு சுரப்பி அதிகமாக சுரந்தால் மிகை தைரொய்டு நோய்கள் (ஹைப்பர் தைராய்டிஸம்) ஏற்படும். தைரொய்டு சுரப்பி குறைவாகச் சுரந்தால் குறை தைரொய்டு நோய்கள் (ஹைப்போ தைராய்டிஸம்) ஏற்படும். தைரொய்டு சுரப்பியே வீங்கும் நிலையில் முன்கழுத்து கழலை (Goitre) பிரச்சினை ஏற்படும்.




### அயோடின் உப்பின் தேவை?

குழந்தை வேண்டாம் என்பதற்காக சாப்பிடும் கருத்தடை மாத்திரைகளால் தைரொய்டு நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதேபோன்று அயடின் சத்துக் குறைவு காரணமாக முன் கழுத்துக் கழலை நோய் ஏற்படலாம். இதனால்தான் உணவில் அயடின் உப்பை பயன்படுத்துமாறு வலியுறுத்தப்படுகிறது.




### மிகை தைரொய்டு நோய் அறிகுறிகள்

மேற்குறிப்பிட்டது போல் தைரொய்டு அதிகமாகச் சுரப்பதால் மிகை தைரொய்டு நோய்கள் வர வாய்ப்பு உண்டு.

☆ பசி அதிகமாக இருக்கும்.
☆ அடிக்கடி சாப்பிட்டாலும் உடல் மெலிந்து கொண்டே போகும்.
☆ கை, கால் நடுக்கம் இருக்கும்.
☆ சில சமயங்களில் உடல் முழுவதும் நடுங்கும்.
☆ காரணம் எதுவுமின்றி கோபம் வரும்.
☆ அடிக்கடி மலம் கழிக்க வேண்டி வரும்.
☆ தூக்கமின்மை பிரச்சினை இருக்கும்.
☆ நாடித்துடிப்பு அதிகமாக இருக்கும்.
☆ சிலருக்கு கண் விழிகள் வெளியே தள்ளிக்கொண்டு விகாரமாகத் தெரியும்.
☆ மாதவிலக்கு பிரச்சினைகள் ஏற்படும்.
☆ கால்வீக்கம், மூட்டுவலி, ஞாபக சக்தி குறைவு, வேலைகளில் ஈடுபாடற்ற தன்மை தோன்றும்.

### குறை தைரொய்டு நோய் அறிகுறிகள்.

☆ உடல் பருமனாகும்.
☆ மலச்சிக்கல் ஏற்படும்.
☆ சோம்பேறித்தனமும் அசதியும் அதிக தூக்கமும் ஏற்படும்.
☆ பசியின்மை, முடிகொட்டுதல், மாதவிலக்கு பிரச்சினைகள், கால்வீக்கம் மூட்டுவலி ஏற்படும்.
☆ பெண்கள் பூப்பெய்துவது தாமதமாகும்.

### கட்டி ஏற்பட்டால்

கழுத்தில் தைரொய்டு சுரப்பி உள்ள பகுதியில் சிறிய அளவில் கட்டி ஏற்பட்டால் அலட்சியமாக இருந்து விடக்கூடாது. ஏனெனில் தைரொய்டு ஓமோன் அதிகமாகச் சுரக்கும் நிலையில் வீக்கமும் விஷக் கட்டியும் ஏற்படும். இது நச்சுக் கழலை ஆகும்.

ஆரம்ப நிலையில் வலி இருக்காது. திடீரென கட்டி பெரிதாக வலிக்க தொடங்கும். சில சமயங்களில் பேச்சு நரம்பு பாதிக்கப்பட்டு பேச்சுத்திறன் பறி போகவும் வாய்ப்பு உண்டு. எனவே ஆரம்ப நிலையிலே சிகிச்சை அளிக்கும் நிலையில் எளிதாகக் கட்டுப்படுத்தி விடலாம்.

### குழந்தைகள் படிப்பில் மந்தமாக இருந்தால்...

குழந்தைகள் படிப்பில் மந்தமாக இருந்தால் தைரொய்டு சுரப்பிகளில் குறைபாடு உள்ளதா என்று பார்ப்பது அவசியம். தைரொய்டு பரிசோதனை செய்து சிகிச்சை பெறுவது அவசியம்.

### அணுவியல் சிகிச்சை

இன்று வேகமாக வளர்ந்து வரும் அணுவியல் மருத்துவத்தில் இத்தகைய நோய்களை கண்டுபிடிப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் ஐசோடோப் எனப்படும் அணுவியல் மருந்து பயன்படுத்தப்படுகிறது. கதிர் இயக்கத்தன்மை உடைய இந்த மருந்து நோயாளிக்கு வாய் வழியாகவோ ஊசி மூலமாகவோ செலுத்தப்படும்.

உடலில் உள்ள எல்லா உறுப்புக்களிலும் ஏற்படும் புற்றுநோய்களையும் குறிப்பாக மூளை, கல்லீரல், சிறுநீரகம் தைரொய்டு ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோய்களை கண்டுபிடிக்க முடியும்.

# மன்னாரில் கடும் மழை; பல வீதிகளில் வெள்ளம்

(மன்னார்)

மன்னாரில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பெய்துவரும் கடும் மழையின் காரணமாக தற்போது மன்னாரின் பல இடங்களிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதோடு மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களின் பின் தற்போது மன்னாரில் கடும் மழை பெய்து வருகின்றது. மன்னாரில் உள்ள அனைத்து வீதிகளும் உயர்த்தப்பட்டு கொங்கிறீட் வீதிகளாக மாற்றப் பட்டுள்ளன.

கழிவு நீர் வாய்க்கால் எவையும் புதிதாக அமைக்கவில்லை. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் கடும் மழையின் காரணாக மழை நீரை வீடுகளை விட்டு வெளியேற்றுவதில் மக்கள் பெரிதும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மன்னாரிலும் டெங்கு காய்ச்சல் அபாயம் ஏற்பட்டுள்ளமையினால் மழை நீரினால் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது மழைநீர் வீதிகளிலும் தேங்கி நிற்கின்றது. இதனால் போக்குவரத்துக்களும் சில வீதிகளில் பாதிக்கப்பட்டுள்ளன.

எனினும் டெங்கு ஒழிப்பு வாரம் மன்னாரிலும் பிரகடனப்படுத்தி மன்னாரில் உள்ள வீடுகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பொது இடங்கள் ஆகியவற்றில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பூங்கா காணிகளில் சட்டவிரோத நிர்மாணங்களுக்கு தடைவிதிப்பு

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

வனவிலங்கு பூங்கா பகுதியில் நிரந்தர கட்டடம் அமைக்க எவரும், எவருக்கும் இடமளிக்க கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தற்போது யால வன விலங்கு பூங்காவுக்கு சொந்தமான காணியில் அரசாங்கத்தின் எந்தவித உத்தியோகபூர்வ அனுமதியுமின்றி கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இக் கட்டடங்களை 24 மணித்தியாலயத்துக்குள் அகற்ற வேண்டுமென ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி கட்டடம் நிர்மாணிப்பதற்கு அமைச்சரவையிலே அல்லது வேறு எந்த அமைச்சிலோ உத்தியோகபூர்வ அனுமதி வழங்கப்படவில்லையென குறிப்பிட்ட ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மாவட்ட விசேட அபிவிருத்திக் கூட்டத்தில் இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வாகவே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் மட்டுமன்றி நாட்டில் எப்பகுதியிலும் வனவிலங்கு பூங்கா பகுதியில் நிரந்தர கட்டடம் அமைப்பது நிறுத்தப்பட வேண்டும். (அ-2)

# நாடு திரும்பாத விரிவுரையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## உயர்கல்வி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்று இன்னமும் நாடு திரும்பாத விரிவுரையாளர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென உயர்கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரட்ன கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடனான ஒப்பந்த அடிப்படையில் கடந்த 15 வருடங்களுக்குள் மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்ற விரிவுரையாளர்களுள் 642 பேர் தமது ஒப்பந்த காலம் முடிவடைந்தும் இதுவரையில் நாடு திரும்பவில்லை.

விரிவுரையாளர்கள் முதுகலைமாணி மற்றும் தமது கலாநிதி பட்டங்களை பெற்றுக் கொள்வதற்காக அனுமதியுடனும் ஒப்பந்த அடிப்படையிலும் வெளிநாடுகளுக்கு செல்கின்ற போதும் தமது கல்வி நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் இவர்கள் தாய் நாட்டிற்கு திரும்பாது அந்தந்த நாடுகளிலேயே தங்கி விடுகின்றனர்.

இதனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பாரிய நட்டத்தை எதிர்நோக்குவதுடன் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு எதிர்நோக்கும் நட்டத்தை ஈடுசெய்யும் வகையில் இவர்களுக்கெதிராக அவசியம் ஏற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (அ-2)

# திவிநெகும குறித்து கதைக்க கூட்டமைப்புக்கு உரிமையில்லை

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

திவிநெகும சட்டமூலம் தொடர்பில் கதைப்பதற்கான அதிகாரமும் தகுதியும் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு இல்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் செவ்வியில் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையில் காணப்படுகின்ற மாகாண சபைகளில் 90 சதவீதமான உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கட்சியை சேர்ந்தவர்கள். கிழக்கு மாகாணத்தை தவிர தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு வேறு எந்த மாகாண சபையிலும் உறுப்பினர்கள் இல்லை.

அத்துடன் அவர்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகவும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே அவர்களுக்கு இந்த சட்டமூலத்துக்கு எதிராக செயற்படுவதற்கு அதிகாரம் இல்லை.

இதேவேளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இலங்கையில் பிரிவினைவாதத்தை தோற்றுவிப்பதற்காக புலம்பெயர் தமிழர்களின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச வல்லரசுகளின் நிகழ்ச்சிநிரல்

இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச வல்லரசுகளின் நிகழ்ச்சிநிரல் என்ன என்ற கேள்விகளுக்கான பதிலைத் தேடும் போது, இந்தியா, சீனா, மேற்குலகு என்கின்ற மூன்று முக்கிய சக்திகளின் நகர்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதில் 80களின் ஆரம்பத்தில் உருவான இந்திய அமெரிக்க ஆதிக்கப் போட்டி இன்றுவரை நீடிப்பதை அவதானிக்கலாம். அதேவேளை கடந்த பத்தாண்டுகளாக சீனாவில் ஏற்பட்டுள்ள துரித பொருளாதார வளர்ச்சி, மூன்றாவது சக்தியொன்றின் நேரடித் தலையீட்டினை இலங்கையில் ஏற்படுத்துவதை காண்கிறோம்.

மலாக்கா நீரிணைக்கு மாற்றீடாக இந்து சமுத்திரக் கடற்பிராந்தியம் சீனாவிற்குத் தேவைப்படுவதால், இம்மாற்றம் நிகழ்கிறது. எண்ணெய் மற்றும் கனிம பொருட்களுக்கான சீனாவின் வழங்கல் பாதையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடல் பிராந்தியமாக இவையிரண்டும் மாறிவிட்டன.

ஆகவே, தவிர்க்க முடியாமல் முப்பெரும் சக்திகளின் பிராந்திய நலன்கள், இலங்கையில் புதிய அரசியல் சூழலை உருவாக்குகின்றது என்பதை நோக்கவேண்டும்.

87 இல் ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தமும் , 2002 இல் உருவாக்கப்பட்ட விடுதலைப்புலிகள்- அரசு சமாதான ஒப்பந்தமும், மேற்குலக, இந்திய பிராந்திய ஆதிக்க முரண்பாட்டின் பக்கவிளைவுகளாகும்.

சீனன்குடா எண்ணெய் சேமிப்புக் குதங்கள் சில சிங்கப்பூர் கம்பனியால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட விவகாரமும், அதன் அடுத்த கட்டமாக திருமலை இயற்கைத் துறைமுகம் அமெரிக்காவின் கைகளுக்குச் சென்றுவிடுமோ என்கிற அச்சமும் புத்தளம் *வாய்ஸ் ஒப் அமெரிக்கா* நவீனமயமாக்கப்படுகிறது என்ற இந்த மூன்று முக்கிய செய்திகளும் இலங்கை குறித்தான இந்திய நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பின்னர் போராட்ட இயக்கங்களுக்கு இந்தியா பயிற்சி மற்றும் ஆயுதங்கள் வழங்கியதோடு, இறுதியில் இலங்கையோடு ஒப்பந்தம் செய்து அமெரிக்காவின் தந்திரோபாய நகர்வினை முறியடித்தது.

*அதேவேளை விடுதலைப்புலிகளின் படைவலுவும், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் நீட்சியும், சர்வதேச அங்கீகாரத்திற்கான புலிகளின் எதிர்பார்ப்புமே, 2002 இல் நோர்வே அனுசரணையுடன் ஒப்பந்தம் ஒன்று உருவாகிய காரணிகளாகக் கொள்ளலாம்.*

2005 ஆம் ஆண்டளவில் சீனாவின் தலையீடு, சிங்களத்தின் அனுசரணையுடன் இலங்கையில் அதிகரிக்கின்றது. அத்தோடு மேற்குலகால் உருவாக்கப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை முறியடிக்கும் வகையில் சிங்களத்தின் இராணுவ- அரசியல் செயற்பாடுகள் துரிதமடைகின்றன. அதிகார மாற்றத்திற்கு இந்தியாவும் துணைபுரிகிறது. ஏனெனில் கொழும்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஒவ்வொரு தருணமும், அதனை இந்தியாவிற்கு தெரிவித்து அதன் அனுசரணையுடனேயே எல்லாவற்றையும் செய்தோமென எரிக்சொல்ஹெய்ம் தன்னிலை விளக்கமளித்தாலும் மேற்குலகத்தார் இலங்கை அரசியலில் ஆளுமை செலுத்துவதை இந்தியா விரும்பவில்லை என்பதை ஜனாதிபதி மகிந்தவின் 2002 சமாதான ஒப்பந்த முறிப்பும் தெளிவாக உணர்த்துகின்றன.

ஒப்பந்தம் சிங்களத்தால் ஒருதலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்டபோது, இந்தியா அமைதியாக இருந்தது. அதற்கான பழியை விடுதலைப்புலிகள் மீது போட்டது மேற்குலகம். இங்குதான் மேற்கலகின் நிகழ்ச்சிநிரலில் மாற்றமேற்படுவதை அவதானிக்கலாம்.

ஜனாதிபதி மகிந்த தலைமையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், அதற்கு மறைமுக ஆதரவளித்த இந்தியாவின் நிலைப்பாடும் பிராந்தியச் சூழலில் இந்தியாவை மீறிச்செல்ல முடியாத இக்கட்டான நிலையை மேற்குலகிற்கு ஏற்படுத்தியது. இந்நிலை மாற்றத்திற்கு சீனாவும் ஒரு காரணம்.

இருவருக்கிடையே நிகழும் (இந்தியா– அமெரிக்கா) ஆதிக்கப்போட்டியில் மூன்றாமவர்–சீனா நுழைந்து கொண்டால் நிலைமை என்னவாகும்? முதல் இருவரும் தம்மிடையே இருக்கும் முரண்பாடுகளை ஒதுக்கிவைத்து மூன்றாவது சக்தியை உள்நுழையவிட்டவரோடு சிங்களம் இணங்கிப்போவதே சரியென்று எடுக்கும் நிலை தோன்றும்.


இதுதான் 2005 இற்குப் பின்னர், சர்வதேச வல்லரசுச் சகதிகள் இலங்கையில் எடுத்த நிலைப்பாடு.

ஆயினும் சமாதானம் பேசிய மேற்குலகும், மௌனமாக நின்ற இந்தியாவும் அடுத்து என்ன செய்துவது என்று சிந்தித்துக்கொண்டிருந்தபோது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை அழித்திட சீனாவின் படைக்கல உதவியை இலங்கை பெருமளவில் பெற்றுக்கொள்கிறது.

அதேவேளை இந்தியாவைப் பொறுத்தவரை சீனாவின் வருகையால் இந்திய- இலங்கை ஒப்பந்தம் வலுவிழந்து போவதை உணர்வதோடு முழுமையான பொருளாதார இருதரப்பு உடன்பாடு என்கிற *சீபா ஒப்பந்தத்தை* ஜி.எல்.பீரிசினூடாக ஏற்படுத்த பெருமுயற்சி எடுத்தது. அதற்கான முயற்சியை இந்தியா இன்னமும் கைவிடவில்லை.

மேற்குலகைப் பொறுத்தவரை சிங்களத்தால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டவுடன், தனது பிராந்திய நலனிற்கான நிகழ்ச்சிநிரலில் சிதைவு ஏற்படுவதைப் புரிந்துகொள்கிறது.

இருப்பினும் இவ்விரு சக்திகளின் பிராந்திய நலனிற்கான ஆதிக்கப்போட்டியை, சீனாவைக்கொண்டு வேறுதிசையில் திருப்பிவிட்டது சிங்களப்பேரினவாதம்.



அதாவது திருமலைத் துறைமுகத்திற்கு மாற்றீடாக, அம்பாந்தோட்டையில் பாரிய துறைமுகம் ஒன்றினை உருவாக்க சீனாவின் உதவியைப் பெற்று அதற்கான அடித்தளத்தை இட்டது.

சிங்கப்பூர் மற்றும் துபாய்க்கு இருக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார குவிமைய சாதக நிலையை, இலங்கையிலும் உருவாக்க வேண்டுமென சிங்களம் திட்டமிடுவதில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. அதாவது சீர்குலையும் உலகப் பொருளாதார கட்டமைப்பினை நிமிர்த்துவதற்கு ஆசியாவின் பொருண்மிய வளர்ச்சியானது காத்திரமான பங்களிப்பினை வழங்குமென மேற்குலகு எதிர்பார்ப்பதால், கடல்வழித் தலைவாசலிலுள்ள இலங்கை இதில் முக்கிய பங்காற்றுமென சிங்களம் எடைபோடுகிறது.

ஆகவே இச்சாதகமான அம்சங்கள் தனது முக்கியத்துவத்தை மேற்குலகிற்கும் இந்தியாவிற்கும் உணரவைக்குமெனப் புரிந்து கொள்ளும் இலங்கை அரசு, நிபந்தனைகளையும் அழுத்தங்களையும் சுமத்தாத, இராஜதந்திர நிலையொன்றினை இவர்களோடு ஏற்படுத்த, சீனாவோடு உறவாடிக் கொண்டிருக்கும் தந்தரிரோபாயத்தை மேற்கொள்கிறது.

ஆகவே, கைநழுவிச் செல்லும் தமது நலனை மீளுறுதி செய்ய, சிங்களத்தின் புலி அழிப்பு என்கிற பேரினவாத வியூகத்துள் கலந்து கொள்வதைத் தவிர இவர்களுக்கு வேறுவழி தெரியவில்லை.

ஆகவே சிங்களத்தை திருப்திப்படுத்தும் வகையில் ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு, தனி நாட்டுக்கோரிக்கை[illegible] ஆயுதங்களை ஒப்படைத்தல் போன்ற விடயங்களை இந்தியாவும் மேற்குலகும் தொடர்ந்தும் வலியுறுத்திய வண்ணமிருந்தன.

அத்தோடு இலங்கையில் அதிகரிக்கும் சீனாவின் பொருண்மிய- படைத்துறை ஆதிக்கத்தை முறியடிப்பதற்கே, விடுதலைப் புலிகளுக்கு எதிரான சிங்களத்தின் போரிற்கு அமெரிக்க அணியினரும் இந்தியாவும் இராஜதந்திர மற்றும் படைத்துறை உதவிகளை வழங்கின.

இதில் இம்மூன்று வல்லரசுச் சக்திகளையும் கையாண்ட விதத்தில் தற்காலிக இராஜதந்திர வெற்றியை சிங்களம் அடைந்ததை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனாலும், இத்தகைய நகர்வுகள் ஊடாக, சிங்களத்தோடு சேர்ந்து விடுதலைப்புலிகளின் இராணுவ வலிமையைத் தோற்கடிக்க உதவினால் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் குறைவடையுமென இவர்கள் போட்ட கணிப்பீடு பிழைத்துப்போய்விட்டது.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் புலிகளின் அச்சுறுத்தல் இன்னமும் இருக்கிறது என்று கூறியவாறு சீனாவின் உதவியோடு வடக்கில் படைத் தளங்களை சிங்களம் விரிவுபடுத்துவது போன்று, புலிகள் மீதான தடையை நீடித்தவாறு பாக்குநீரிணையில் ஆபத்து என்ற அதே உத்தியை வேறொரு வகையில் இந்தியாவும் கையாள முயற்சிக்கின்றது. மறுபுறத்தில் போர்க்குற்றம், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் என்கிற புதிய அழுத்தங்களை மேற்குலகு பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது.

அதேவேளை அங்கு நடைபெறுவது *இன அழிப்பு* என்று புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் சொல்லக்கூடாது என்பதிலும் இந்த மேற்குலகின் கருத்துருவாக்கிகள் *ஜஅலன் கீனன், எரிக் சொல்ஹெய்ம்* உட்பட விழிப்பாக இருக்கின்றார்கள்.

*இனஅழிப்பு* என்பது நிறுவப்பட்டால் அது, பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை தமிழ் தேசிய இனத்திற்கு அளித்து விடும் என்பதுதான் இவர்களின் கவலை. இலங்கை அரசே, போர்க்குற்ற விசாரணையை நடாத்தட்டும் என்று சொல்வதன் சூத்திரமும் அதுதான்.

சிங்களத்தின் தமிழின அழிப்பு என்கிற வியூகத்தினுள் மேற்குலகம் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டது என்பதைத்தான் இவை எடுத்துக் காட்டுகின்றன. ஈழத் தமிழ் மக்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயமும் இதுதான்.

உண்மையிலேயே விடுதலைப்புலிகளல்ல, இவர்களுடைய பிரச்சினை.

புலிகளின் பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடே, இலங்கை விவகாரத்தில் தமது நலனிற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதுதான் இந்திய- மேற்குலக வல்லரசாளர்களின் தலையாய பிரச்சினை.

அதாவது சிங்களத்திற்கு பிடிக்காததை தமிழ்மக்கள் முன்வைத்தால், சீனாவிற்கு எதிராக தாம் முன்னெடுக்கும் நகர்வுகள் பின்னடைவை நோக்கிச் செல்லுமென இவர்கள் அச்சப்படுகின்றார்கள்.

சர்வதேச அரங்கில் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துவிடுமோ என்கிற அச்சத்தாலேயே, புலிகள் போன்று கூட்டமைப்பு பேசுகிறது என சிங்களம் அடிக்கடி கூறுகிறது.

அதேவேளை, விடுதலைப்புலிகள் முன்னெடுத்த தனிநாட்டிற்கான போராட்டத்தை, அவர்களுக்குப் பதிலாக தந்தை செல்வா உயிருடன் இருந்து அகிம்சை வழியில் நடாத்தியிருந்தாலும் அதனை இவ்வல்லவரசுகள் நிச்சயம் எதிர்த்திருக்கும்.

இந்தியப் பஞ்சாயத்து, 13–வது திருத்தச் சட்டம் போன்றவற்றின் அடிப்படையில் தீர்விற்கு உடன்படுங்கள் என்று கூறும் அதே வேளை, மேற்குலகானது, சமஷ்டி, ஒற்றையாட்சிக்குள் சுயாட்சி என்கிற தீர்விற்கான கருத்துருவங்களை–அதில் நம்பிக்கையற்றுச் சொல்வதையும் காணலாம்.

தற்போது தாயக தமிழ் அரசியல் கட்சிகளிடமும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடமும் இக்கோட்பாட்டைக் கைவிட்டு ஒற்றை ஆட்சிக்குள் சிங்களத்துடன் இணக்கப்பாட்டு அரசியல் தீர்வொன்றைக் காணுங்கள் என்றுதான் இவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

ஏனெனில் தீர்க்கப்படாமல் நீடிக்கும் இனப் பிரச்சினை, சீனா மற்றும் மேற்குலகிற்கெதிரான அணியின் ஆதிக்கத்தை இலங்கையில் அதிகரித்துவிடும் என்கிற அச்சமே இவர்களிடம் காணப்படுகின்றது. இவை தவிர, ஆசியாவின் கடலாதிக்கம் அமெரிக்காவிடம் இருந்தாலும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இந்துசமுத்திரக் கடல் பிராந்தியத்தில் தமது கடற்படையின் வலு பலவீனமாக இருக்கிறதென இந்திய ஆய்வாளர்களான கலாநிதி சுபாஸ் கபிலா, பாஸ்கர் ராய் மற்றும் பி.இராமன் போன்றோர் எச்சரிப்பதை கவனிக்க வேண்டும்.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குதித்துள்ள குடி யரசுக் கட்சியின் வேட்பாளர் மிட் றொம்னியும் சீனாவுடனான நாணய யுத்தம் பற்றி எச்சரிக்கிறார். அதோடு அமெரிக்க பல் தேசியக் கம்பனிகளைக் கையகப்படுத்த முனையும் சீனாவின் நகர்விற்குத் தடைபோடும் அளவிற்கு முரண்நிலை முற்றுகிறது. ஜப்பானில் நடைபெற்ற நாணய நிதியத்தின் கூட்டத்தில் கலந்து கொள்ள சீனாவின் மத்திய் வங்கித் தலைவர் மறுத்து விட்டார்.

அதுமட்டுல்லாது தென்சீனா மற்றும் கிழக்கு சீனக்கடல் பிராந்தியத் தீவுகளுக்கான ஆதிக்கப் போட்டியானது உலக நாணய நிதியக் கட்டமைப்பிலும் உடைவுகளை ஏற்படுத்துகிறது.

இந்நிலையில் பிரான்சிஸ் ஹரீசனின் சடலங்கள் இன்னமும் எண்ணப்படுகின்றன எனும் நூலைக் காவிக்கொண்டு புலம்பெயர் நாடுகள் எங்கணும் மேற்குலகின் சமாதான முகம்–எரிக்சொல்ஹெய்ம் வலம் வரப்போகிறார். தமிழ் மக்களின் கூட்டு மன உளவியலில் ஆழமாகப் பதித்திருக்கும் வட்டுக் கோட்டைத் தீர்மானத்திலிருந்து, பிரிந்து செல்லும் பிறப்புரிமைக் கோட்பாட்டை அகற்றுவதற்கு இவர் பெரும்பாடுபடப்போகிறார். தேசியத் தலைவர் தவறான மனிதர் என்று காட்டுவதன் ஊடாக, இன அழிப்பிற்கு துணை போன தமது தவறை மறைப்பதோடு நீங்கள் ஒரு தேசிய இனமல்ல, ஒரு தேசமல்ல, சுயநிர்ணய உரிமை அற்றவர்கள் என்கிற உளவியல் பரப்புரை செய்ய அவர் வருகிறார்.

எங்களின் உதவி உங்களுக்குத் தேவையாயின் சிங்களம் எந்தவிதமான தீர்வை முன்வைக்காவிட்டாலும், நீங்கள் தனிநாடு கோரக் கூடாது என்பதைத்தான் இவர்கள் வலியுறுத்தப் போகிறார்கள்.

தலைவர், பொட்டம்மான் தவிர்ந்த ஏனையோரின் சரணடைவினை ஏற்றுக் கொள்ள, மேற்குலகும் இந்தியாவும் தயாராக இருந்ததாக புதிதாக ஒரு கதை சொல்லி உள்ளார் எரிக்சொல்ஹெய்ம். ஆகவே, தமிழ் மக்களின் எதிரியாக தேசியத் தலைவரை காட்ட இவர்கள் மேற்கொள்ளும் பரப்புரைகள், சிங்களம் தருவதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதில் முடிவடையும்.


மக்களின் அரசியல் அபிலாசை முள்ளிவாய்க்காலிலும் முற்றுப் பெறவில்லையே என்பதுதான் இவர்களின் பெரும் கவலை. இருப்பினும் இலங்கையில் வல்லரசுகள் போடும் ஆட்டம், எமக்கான கதவுகளை திறக்க ஆரம்பித்துள்ளது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்திற்கு வேட்டு வைத்தால் இந்திய படை அத்துமீறி உள்நுழையும்

## விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் 13 ஆவுது திருத்தத்தை இரத்துச் செய்ய முனைந்தால் இந்தியப் படையினர் பலாத்காரமாக இலங்கைக்குள் பிரவேசிக்கும் ஆபத்து ஏற்படும் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பொது எதிர்க்கட்சி கூட்டமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே விக்ரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்குவது தொடர்பில் இந்தியாவில் பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன.

இவ்வாறானதோர் நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்று உறுதியளித்துள்ளார்.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை இரத்து செய்ய முனைந்தால் இலங்கைக்குள் இந்திய இராணுவம் அத்துமீறி நுழையும் சமிக்ஞை உள்ளது.

நிறைவேற்று அதிகாரப் பரவலாக்கல் மூலம் நிறைவேற்று அதிகாரத்தின் பலத்தை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. எனவே இன்றைய தேவை அதிகாரப்பரவலாக்கல் ஊடாக நிறைவேற்று அதிகார பலத்தினை மேலும் குறைப்பதே ஆகும்.

அதைவிடுத்து 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பை உருவாக்கி அதிகார பரவலாக்கலை இல்லாதொழித்து சிங்கள, பௌத்த இனவாதத்தை தலைதூக்க செய்வதா என்பதை சிந்திக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்திற்கு எதிராக முதன்முதல் கறுப்புக்கொடி பறக்கவிட்டு சிறை சென்றவன் நான். பின்னர் 1986 இல் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக எம்மோடு ஜே.ஆர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதற்கு நாம்ஆதரவு வழங்கினோம்.

ஏனென்றால் இதன் மூலம் நிறைவேற்று அதிகாரத்தின் பலத்தை கட்டுப்படுத்த முடியும் என்பதனாலாகும். வடக்கு உட்பட கொழும்பில் மக்கள் வாழும் காணிகளை அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கம் கொள்ளையடிக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு மக்களின் நலன்புரிகளை இல்லாதொழிக்கின்றது.

நீதித்துறை மீது கை வைக்கின்றது. உழைக்கும் வர்க்கத்தினருக்கும் உழைப்பிற்கேற்ப ஊதியம் கிடையாது. இதற்கெதிராக போராட பொது எதிர்க்கட்சிகளாக நாம் இணைந்துள்ளோம். எம்மோடு இணைவதால் அரசுக்கு போராட்டம் மேலும் வலுப்பெறும். அதைவிடுத்து புதுப்புது கூட்டணிகளை அமைப்பதென்பது அரசாங்கத்திற்கே வலு சேர்க்கும் என்றார். (அ-2)

## நவராத்திரி விழா

(பூந்தோட்டம்)

செட்டிகுளம் மகா வித்தியாலயத்தின் வாணிவிழா நிகழ்வு இன்றும் நாளையும் நாளை மறுதினமும் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் எஸ்.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. இன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்திசெபஸ்ரியன், சிறப்பு விருந்தினர்களாக செட்டிகுளம் கோட்டக்கல்வி பணிப்பாளர் கே.நித்தியானந்தம், வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக பொறியியலாளர் கே.சிவகுமாரன், கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாளை புதன்கிழமை விஜயதசமி பூசையும் ஏடு தொடக்கல் நிகழ்வும் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர, கௌரவ விருந்தினராக வெங்கள செட்டிகுளம் பிரதேச செயலாளர் என்.கமலதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-266)

## ஜனாதிபதி பயணிக்கவிருந்த விமானத்தில் கோளாறு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் அமைச்சர்களும் டுபாய்க்கு பயணிக்கவிருந்த விமானத்தில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக குறித்த விமானத்தில் அவர்களால் பயணிக்க முடியாத நிலையில் பிறிதொரு விமானத்தில் செல்ல வேண்டி ஏற்பட்டதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதன்காரணமாக அவரது பயணத்தில் சில மணிநேரம் தாமதம் ஏற்பட்டதாகவும் அந்தச் செய்திகள் மேலும் கூறுகின்றன.

குறித்த விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த இரு என்ஜின்களில் ஒன்றின் எரிபொருட்காவு குழாய்க் கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டிருந்தது.

ஆனால் இந்தக் கோளாற்றை விமான நிலையத் தொழில்நுட்பவியலாளர்களால் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளது.

சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யுஎல். 1207 என்ற விமானத்திலேயே இந்தக் கோளாறு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சீரடி சாயிபாபாவின் 94 ஆவது சமாதி தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சீரடி சாயிபாபாவின் 94 ஆவுது மஹா சமாதி தின நிகழ்வுகள் புதன்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக இல. 314, நாவலர்வீதி, நல்லூரில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திர் ஆலயம் அறிவித்துள்ளது.

விசேட அபிஷேகம் வசந்தமண்டபப்பூசை என்பன நடைபெற்று பாபா உள்வீதி வலம் வருதலும் நடைபெறும். 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பாபா பாதத்திற்கு பால் அபிஷேகம் செய்யலாம் எனவும் அறிவித்துள்ளது. (அ-9)

## வாசிப்பு மாத போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தென்மேற்கு பிரதேச சபை முன்பள்ளி சிறார்களுக்கு மானிப்பாய் பொது நூலகத்தினால் கதை சொல்லும் நேரம், சித்திரப் போட்டி, திரைமூலம் கதை காட்சிப்படுத்துப்பல் ஆகியநிகழ்வுகள்நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை பிரதேச சபை முன்பள்ளியில் நடைபெறும் இப்போட்டியில் முன்பள்ளி மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மானிப்பாய் பொது நூலகர் செல்வி. கி.கிருஷ்ணவதனி அறிவித்துள்ளார். (அ-6)

## வன்னி மக்கள் அவலம் என்று தீருமோ! மீண்டும் வெள்ளத்தால் இடப்பெயர்வு

(கிளிநொச்சி)

வன்னியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் கடும்மழையினை அடுத்து மீள் குடியேறிய மக்களின் கூடாரங்கள் வெள்ளத்தில் மிதப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து செல்லும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக வன்னியில் கடும் வரட்சியும் நீர்ப்பற்றாக் குறையும் ஏற்பட்டது. விவசாய நிலங்கள் வரட்சியால் கருகின.

இதனால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. மக்களுக்கு உணவுப்பற்றாக் குறை ஏற்பட்டது. குடிநீருக்கு அல்லாடிய மக்கள் பல கிலோமீற்றர் தூரம் சென்று குடிநீரை பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் பல இடங்களில் பணம் கொடுத்தும் வாங்கிக் குடித்தார்கள். மழையைப் பார்த்து வரட்சிக்கு முடிவு வருகிறது என்று மகிழ்ந்த வன்னி மக்கள் தாம் வசிக்கும் தற்காலிக கூடாரங்களுக்குள் தற்போது மழை வெள்ளம் புகுந்ததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என அனைவரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வன்னியில் மீள்குடியேற்றம் நடந்த பெரும்பாலான இடங்களில் வீட்டுத் திட்டங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. மக்கள் தொடர்ந்தும் தற்காலிக கூடாரங்களிலேயே வசித்து வருகின்றனர். இந்த தற்காலிக கூடாரங்கள் தறப்பாளினாலும் தகரங்களினாலும் அமைக்கப்பட்டவை.

பாதுகாப்பும் சுகாதாரமும் இல்லாத இந்தக் கூடாரங்கள் கொடிய நோய்த்தொற்றுக்களை ஏற்படுத்தக்கூடிய்வையாகவுள்ளன. கடந்த மூன்று வருடங்களாக மக்களுக்கான வீட்டுத்திட்டத்தை வழங்குகிறோம் என்று சொல்லி அரசு காலத்தை கடத்தி வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-2)




உலக சக்தி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ளார். ஐக்கிய அரசு எமிரேட்ஸுக்கான இலங்கை தூதுவர் சரத் விஜயசிங்க ஜனாதிபதியை வரவேற்று அழைத்து வருவதையும் ஜனாதிபதியுடன் அவரின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌசர் பௌசி ஆகியோர் செல்லுவதையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

258

## உண்மையின் உயர்வு

நரேந்திரன் ஒரு நல்ல மாணவன். உண்மை, நேர்மை, அன்பு, கருணை போன்ற பல உயர் குணங்கள் இயல்பாகவே அவனிடம் குடிகொண்டிருந்தன. அவன் தூய வெண்ணிற ஆடை அணிந்து பாடசாலை வருவான். பள்ளிப் பாடங்களையெல்லாம் ஆர்வத்துடன் கற்றுக்கொள்வான். ஆசிரியருக்கும் கீழ்ப்படிந்து நடப்பான்.

மொத்தத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் முழு மாணவர்களுக்குமே நரேந்திரன் ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தான்.


ஒருநாள் வகுப்பாசிரியர் கணித பாடம் நடத்திக்கொண்டிருந்தார். தான் நடத்தும் பாடத்தை மாணவர்கள் ஒழுங்காகக் கவனிக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள அவர் ஒருவழியைக் கடைப் பிடிப்பது வழக்கம். எதிர்பாராத சமயத்தில் மாணவர்களிடம் பாட சம்பந்தமாகக் கேள்விகள் கேட்பதுதான் அவ்வழக்கமாகும்.

அன்றும் அவர் நரேந்திரன் அருகேயிருந்த ஒரு மாணவனிடம் திடீரென்று ஒரு கேள்வியைக் கேட்டார். அந்த மாணவனும் பணிவுடன் எழுந்து நின்று பதில் சொன்னான்.

ஆசிரியருக்குக் கோபம் வந்தது. நீ சொன்னது பிழையான பதில் என்று சொல்லி தன் கையிலிருந்த பிரம்பினால் அந்த மாணவனை நன்றாக அடித்து விட்டார்.

ஏன் ஐயா அவனை அடித்தீர்கள்? உங்கள் கேள்விக்கான விடையை அவன் சரியாகத்தானே சொன்னான் என்று நரேந்திரன் ஆசிரியரைப் பார்த்துக் கேட்டான்.

அவன் எங்கே சரியான விடை



யைச் சொன்னான்? நீ எனக்கே பாடம் கற்பிக்கலாம் என்று நினைக்கிறாயா? என்று கேட்டு நரேந்திரனை முறைத்துப்பார்த்தார் ஆசிரியர்.

இல்லை ஐயா. அவன் மிகச் சரியாகவேதான் விடை சொன்னான் என்று உறுதியாகச் சொன்னான் நரேந்திரன்.

ஆசிரியுருக்கோ கடும் கோபம் வந்துவிட்டது. தன் கைப்பிரம்பினால் நரேந்திரனுக்கும் நல்ல அடி கொடுத்தார் அவர்.

நரேந்திரன் அடிகளின் கொடிய வலியைப் பொறுத்துக் கொண்டான். ஆயினும் பயந்துபோய் பேசாமல் இருந்தான் இல்லை. நீங்கள் எட்ட இருந்தீர்கள் ஐயா. இவன் மெதுவான குரலில் பதிலைச் சொன்னான். நான் கிட்டே இருந்தேன். அவன் சொன்னது உங்களுக்கு விளங்கவில்லை. ஆனால் எனக்கு விளங்கியது. அதனால்தான் நான் சொல்கிறேன். அவன் மிகச் சரியான பதிலையே சொன்னான் என்று. வேண்டுமானால் நீங்களே இப்போது அவன் அருகில் வந்து அக்கேள்வியைக் கேட்டுப்பாருங்கள் ஐயா என மிகவும் பணிவாக ஆசிரியரிடம் அவன் சொன்னான்.

ஆசிரியரும் நரேந்திரன் கேட்டுக் கொண்டபடியே அந்த மாணவன் அருகில் போய் நின்று மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார்.

அவனும் முன் சொன்ன அதே பதிலை திரும்பவும் சொன்னான். அது சரியாகவே இருந்தது.

ஆசிரியர் பெருங்கவலை கொண்டார்.

நரேந்திரா என்னை மன்னித்து விடடா. தவறுதலாக உன்னையும் அல்லவா நான் அடித்துவிட்டேன் என்று மனம் வருந்தி நரேந்திரனிடம் மன்னிப்புக்கேட்டார் ஆசிரியர்.

இல்லை ஐயா. உங்கள் மேல் குற்றமே இல்லை. இவன் சத்தமாகப் பதில் சொல்லியிருந்தால் இப்படி நடந்திருக்க முடியாதே என்று சொல்லி ஆசிரியரைச் சமாதானப்படுத்தினான் நரேந்திரன்.

எதற்கும் அஞ்சாமல் அன்று உண்மையை உரைத்து நின்ற நரேந்திரன் என்ற அந்த மாணவன் யார் தெரியுமா?

அவர்தான் சுவாமி விவேகானந்தர்! இவர் சுவாமி இராம கிருஷ்ண ப்ரமஹம்சரின் பிரதம சீடராவார். சிறந்த ஆன்மீகத் தொண்டாற்றிய இளந்துறவியும் இவராவார்.

## பெரியவர் பேச்சைக் கேட்போம்

ஒரு காட்டில் ஒரு பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதன் ஒரு கிளையில் புறா ஒன்று வாழ்ந்து வந்தது.

இன்னொரு கிளையில் குரங்கு ஒன்று இருந்தது.

அந்த மரத்தின் நிழலில் யானை ஒன்று வாழ்ந்து வந்தது.

அவை மூன்றும் நண்பர்களாக இருந்தன. இரவு நேரத்தில் அவை கூடிப் பேசிப் பொழுதைக் கழித்தன.

வழக்கம் போல அன்றும் அவை பேசிக்கொண்டிருந்தன.

நம் மூவரில் யார் பேச்சை மற்றவர் கேட்க வேண்டும் என்று கேட்டது புறா.

பெரிய விலங்கு நான். என் பேச்சை நீங்கள் கேட்க வேண்டும் என்றது யானை.

நம்மில் அறிவு நிறைந்தவன் நான்தான். என் பேச்சை நீங்கள் கேட்கவேண்டும் என்றது குரங்கு.

மூத்தவர் பேச்சை இளையவர்கள் கேட்கவேண்டும். நம்மில் யார் மூத்தவரோ அவர் பேச்சை மற்றவர் கேட்போம். என்ன சொல்கிறீர்கள் என்றது புறா.

நீ சொல்வது நல்ல வழி. நாம் மூவரும் பல ஆண்டுகளாக இங்கே இருக்கிறோம்.

நம்மில் மூத்தவர் யார் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது என்று கேட்டது யானை.


அவை மூன்றும் சிந்தனையில் ஆழ்ந்தன.

அமைதியைக் குலைத்த குரங்கு இந்தப் பெரிய ஆலமரத்தில் நாம் நீண்டகாலமாக வாழ்கிறோம்.

இந்த மரத்தை நாம் எப்பொழுது முதலில் பார்த்தோம். நினைவுபடுத்திச் சொல்வோம். அதை வைத்து யார் முதியவர் என்பதை முடிவு செய்வோம் என்றது.

உடனே யானை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அப்பொழுது நான் [illegible] குட்டியாக இருந்தேன்.

இந்த ஆலமரம் சிறிய செடியாக இருந்தது. நான் நடந்த போது இதன் இலைகள் என்



வயிற்றைத் தடவின என்றது.

அடுத்தாகக் குரங்கு நான் அப்பொழுது குட்டியாக இருந்தேன்.

இந்த ஆலமரம் சிறிய செடியாக இருந்தது. நான் இதன் அருகே அமர்ந்து இலையைப் பறித்தேன்.

இதைப் பார்த்த என் தாய் மகனே இந்தச் செடியின் இலையைப் பறிக்காதே. இதை வளர விடு. இது பெரிய மரம் ஆகும்.

இதையே உன் வீடாக வைத்துக் கொள்ளலாம்.

நீ மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று அறிவுரை சொன்னது. அப்படியே நடந்தது என்றது.

மூன்றாவதாகப் புறா எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. நான் இன்னொரு காட்டில் இதேபோன்ற ஆலமரத்தில் பிறந்தேன். என் பெற்றோரைப் பிரிந்து இங்கு பறந்து வந்தேன்.

அந்த ஆலமரத்திலிருந்து சில விதைகளை எடுத்து வந்தேன்.

அவை இங்கே விழுந்தன. அவற்றில் ஒன்றே இந் ஆலமரமாக முளைத்தது என்றது.

இதைக்கேட்ட யானையும் குரங்கும் புறாவே எங்களை விட வயதில் பெரியவர் நீரே. உம் பேச்சைக் கேட்டு நாங்கள் நடப்போம் என்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை சர்வதேசம் தனிமைப்படுத்தக்கூடாது

## அகாசி கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச சமூகம் தனிமைப்படுத்தக் கூடாது என இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி கோரினார் என விக்கிலீக்ஸ் இணையம் வெளியிட்டுள்ளது.

நோர்வேக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள் ளன.நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இணைத் தலைமையில் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது அகாசி இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் குறிப்பிட்டவை வருமாறு.

சர்வகட்சிப் பேரவை தீர்வுத் திட்டத்தை காத்திரமான முறையில் முன்வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தனிமைப்படுத்தாது சகல வழிகளிலும் இன பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சர்வகட்சிப்பேரவைப் தீர்வுத் திட்டம் தொடர்பில் அதன் தலைவர் திஸ்ஸ விதாரண அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்.

சர்வகட்சிப் பேரவை ஊடாக தீர்வுத் திட்டமொன்று துரித கதியில் முன்வைக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் .

வன்னிப் பிரதேசத்திற்குள் மனிதாபிமான தொண்டர்கள் சுதந்திரமாக பிரவேசிப்பது தொடர்பில் இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்துடன் பேச வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்த போவதில்லை

## உலகத்தமிழர் பேரவை அதிரடி

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என உலகத் தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேசப் போவதில்லை என உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென அரசாங்கம் மெய்யாகவே விரும்பினால் முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென விரும்பினால் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலகுவில் தீர்வினை எட்ட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடக்க உள்ள நிலையில் இதுவரையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் யதார்த்தமான முனைப்புக்களை அரசாங்கம் மேற்கொள்ளத் தவறியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை என்ற நிலைப்பாட்டிலிருந்து புலம்பெயர் சமூகம் மாறுபடாது என அவர் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன் வடக்கு கிழக்கில் மனிதாபிமான தொண்டுகளை மேற்கொண்டு வருவதில் தமக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களுக்கு எவரேனும் உதவிகளை வழங்கினால் அதனை விமர்சனம் செய்யும் அவசியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# நல்லடக்கம் செய்யப்பட்டவர் இருவாரங்களில் வீடு திரும்பினார்

(களுத்துறை)

களுத்துறை பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட நபர் ஒருவர் இரண்டு வாரங்களின் பின்னர் வீடு திரும்பிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

களுத்துறை வைத்தியசாலையில் பிரேத அறையில் இருந்த சடலமொன்றை தமது தந்தையின் சடலம் என பிள்ளைகள் அடையாளம் கண்டு அதனை பொறுப்பேற்று இறுதிக் கிரிகைகள் செய்துள்ளனர்.

நல்லடக்கம் செய்து இரண்டு வாரங்களின் பின்னர் குறித்த நபர் உயிருடன் வீடு திரும்பியுள்ளார்.குறித்த நபர் களுத்துறை கட்டுகுருந்த கரையோரத்தில் முன்னர் வாழ்ந்து வந்தாக தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து லாகொஸ்வத்த என்னும் பிரதேசத்தில் குறித்த நபருக்கு வீடு அமைத்து கொடுக்கப்பட்டது. வேலைக்கு செல்வதாக தெரிவித்து சென்ற தந்தையை சில நாட்களாக வீடு திரும்பாததைத் தொடர்ந்து அவரது பிள்ளைகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, சுனாமியினால் அழிவடைந்த தமது பழைய வீட்டுக்கு அருகாமையில் நஞ்சருந்தி நபர் ஒருவர் ஆபத்தான நிலையில் களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு அவர் உயிரிழந்துள்ளதாக பிள்ளைகளுக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

தமது பழைய வீட்டிற்கு அருகாமையில் நஞ்சருந்தி உயிரிழந்தவர் தமது தந்தையாகவே இருக்கும் எனக் கருதி பிள்ளைகள் சடலத்தை பொறுப்பேற்று இறுதிகிரியைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் ஊர் திரும்பிய நபர் தமது படம் உட்பட மரண அறிவித்தலைகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். உறவினர் வீடொன்றிற்கு சென்றிருந்ததாக குறித்த நபர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நவராத்திரி

வெண்டாமரை நாயகி!
கல்விக்கு அதிபதி தாயவளே
கலைவாணி தாயே!
கலைகளுக்கதிபதியானவளே!
கலைதேவி தாயே!
கரங்களில்வீணை கொண்டவளே
சரஸ்வதி தேவி தாயே
வெண்தாமரையில் வீற்றிருப்பவளே
வெள்ளை உள்ளம் கொண்டவளே!
நா.ரக்ஷினி
தரம் 6 சி
யா/ இந்து மகளிர் கல்லூரி



# மீள்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்



முல்லை மாவட்ட கல்வி மேம்பாட்டு நம்பிக்கைநிதியம் முல்லைத் தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்குத் தொடுவாய் தெற்கு, கருநாட்டுக் கேணி ஆகிய கிராமங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

இவ்வுதவிகள் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.இதற்கமைய கொக்குத்தொடுவாய் வடக்கில் உள்ள 4 குடும்பங்களுக்கும் கொக்கு தொடுவாய் மத்தியில் உள்ள 4 குடும்பங்களுக்கும் கருநாட்டு கேணி கிராமத்தில் உள்ள 6 குடும்பங்களுக்கும் ஆடுவளர்ப்புத்திட்ட த்திற்கான உதவிகளை வழங்கியுள்ளது. இதில் ஒரு குடும்பத்திற்கு 97ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொக்குத்தொடுவாய் தெற்கில் உள்ள 5 குடும்பங்களுக்கு மாடுவளர்ப்பிற்கான உதவிகளை வழங்கியுள்ளது. ஒரு குடும்பத்திற்கு ஒரு இலட்சத்து 4 ஆயிரம் பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கொக்குத்தொடுவாய் மத்தியில் உள்ள ஒரு குடும்பத்திற்கும் கருநாட்டுக்கேணி கிராமத்தில் உள்ள ஒரு குடும்பத்திற்கும் தலா 85 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியுடைய கோழி வளர்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்குமே இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-267)

## மோ.சை. விபத்தில் ஒருவர் பலி

அநுராதபுரம்- கம்பிரிகஸ்வெவ வீதியின் ரலபனாவ பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் பலியானதோடு மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம்நேற்று அதிகாலை இடம்பெற்றது.வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி மற்றும் 11 வயதுமகன்ஆகியோர் அநுராதபுரம்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 28 வயது மனைவி உயிரிழந்துள்ளார்.

ஏணையஇருவரும் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-2)




சீரடி சாயி மந்திரில்
சீரடி சாயி பாபாவின்
94 ஆவது மஹா சமாதி தினம்
(விஜயதசமி)
24.10.2012

அன்பான பக்தர்களே!
24.10.2012 (புதன்கிழமை)
மாலை 2.30 மணிக்கு-பாபா சமாதி அடைந்த நேரம் திருக்கதவு சாத்துதல் (தேவர்களின் பூசைக்காக)
மாலை 3.00 மணிக்கு-பக்தர்களின் தரிசனத்துக்காக திருக்கதவு திறக்கப்படுதல்
மாலை 3.10 மணிக்கு -விசேட அபிசேகம், பாதபூசை, அஷ்டோத்திரம்
மாலை 4.00 மணிக்கு-விசேட துனி பூசை (ஹோமம்)
மாலை 5.00 மணிக்கு- வசந்த மண்டபப் பூசை பாபா உள்வீதி வலம் வருதல்
துனி பூசைக்கு தேவையான சமித்து கட்டு, ஹோமத்திரவியங்கள், பட்டு, பூ, பூமாலை, வாசனைத் திரவியங்கள், நவதானியங்கள், தானியவகை என்பவற்றை வழங்க விரும்புவர்கள் 24.10.2012 மாலை 2 மணிக்கு முன்னர் ஆலயத்தில் சமர்ப்பிக்கலாம்.
காலை8.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பாபா பாதத்திற்கு பால் அபிஷேகம் செய்யலாம்.

சீரடி சாயி மந்திர், 314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே 0777222568, 0213211605
இங்ஙனம்
(598) ஆலயத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்டது சண்டிலிப்பாய் மாதகல் மேற்கில் மீள்குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

**சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த மாதகல் மேற்கு பிரதேசத்தில் 20 வருடங்களின் பின்னர் நேற்று மீள்குடியேற மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டதை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எம். முரளிதரன் உறுதிப்படுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 1992 ஆம் ஆண்டு மாதகல் மேற்கு பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியிருந்தனர். நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிய பல்லாயிரக்கணக்கான மக்களில் மாதகல் மேற்கு மக்களும் உள்ளடங்கியிருந்தனர்.

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்த பின்பும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு பல போராட்டங்களை இந்தப் பிரதேச மக்கள் மேற்கொண்டு வந்தனர்.

இதற்கு முக்கிய காரணம் குறித்த பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததோடு இந்தப் பகுதியை விடுவிக்க அரசாங்கம் முயற்சிக்காமையுமேயாகும்.

மாதகல் மேற்கு மக்கள் சுமார் 20 வருடங்களாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதியைச் சேர்ந்த 221 குடும்பங்கள் மீள்குடியேற்றத்திற்காக பதிவுகளை மேற்கொண்டதோடு தமது சொந்த இடங்களைச் சென்று பார்வையிடவும் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏனைய குடும்பங்களையும் பதிவு செய்யும் நடவடிக்கை மாதகல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விடுவிக்கப்பட்ட மாதகல் மேற்கு பிரதேசமானது காட்டுப்பகுதியாக காட்சியளிப்பதோடு மக்கள் வாழ்ந்த வீடுகளும் யுத்த காலத்தில் முற்றாக அழிவடைந்துள்ளன.

குறித்த பகுதியில் மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு அரசாங்க உதவிகள் வழங்கப்படும் எனவும் வீடுகள், வாழ்வாதார உதவிகள், பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வது மற்றும் குடிநீர் தேவைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மேலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இப்பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறுவதால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

மாதகல் மேற்ய் பகுதி மக்களின் தொடர் போராட்டங்களை அரசாங்கத்திற்கு எதிராக நடத்தியதோடு பாதுகாப்பு செயலாளருக்கு எதிராகவும் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கலும் செய்தனர்.

மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறத் தடையாகவுள்ள பாதுகாப்பு தரப்பினர் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை விட்டு வெளியேற வேண்டும் என தமிழ் அரசியல் தலைமைகளும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர். அத்தோடு பல போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர்.

அதுமட்டுமன்றி வெளிநாட்டு பிரதிநிதிகள் யாழ். மாவட்டத்திற்கு வருகை தரும் போதும் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் இராணுவ வெளியேற்றம் தொடர்பிலும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் வலியுறுத்தி வந்ததோடு சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தமை தெரிந்ததே. (அ-6)

## ரணிலை இருகரம்கூப்பி வணங்க வேண்டுமாம்

### அமைச்சர் ஜனக கூறுகிறார்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை இரு கரம்கூப்பி வணங்க வேண்டும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு வழங்கும் ஒத்துழைப்புக்காக அந்த கௌரவத்தை செய்ய வேண்டும்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியை மையப்படுத்திய அரச விரோத கூட்டணி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (அ-2)

## சப்புகஸ்கந்தவில் இருந்து மசகு எண்ணெயை பெறுவதில் தாமதம்

### பெற்றோலியக்கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான மசகு எண்ணெயைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் நிலவுவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஈரானிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையே இதற்கான காரணம் என கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுசந்த சில்வா கூறியுள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய் மாத்திரமே சுத்திகரிக்கப்படுகிறது.

வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற எண்ணெய் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டால் தொழில்நுட்ப பிரச்சினைகள் ஏற்படலாம் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

ஈரானிடமிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற எண்ணெய்க்கு மாற்றீடாக பயன்படுத்தக் கூடிய மசகு எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் அடுத்த மாதமளவில் அதனை நாட்டிற்கு இறக்குமதி செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மசகு எண்ணெய் பற்றாக்குறை காரணமாக நாளையதினம் முதல் சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தடைப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக தேசிய ஊழியர் சங்கத்தின் பெற்றோலியப் பிரிவு செயலாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார். (அ-2)

## மன்னாரில் அதிசய நெல்லி

(மன்னார்)

மன்னார் பெரியகடை பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நெல்லிமரம் ஒன்று அதிசயமான முறையில் காய்த்துள்ளது.

இரு வித்திலைத் தாவரமான நெல்லிமரம் தண்டு மற்றும் கிளைப் பகுதிகளிலே காய்ப்பது வழமை.

எனினும் அதிசயமான முறையில் குறித்த நெல்லிமரத்தில் இலையில் நெல்லிக்காய்கள் காய்த்திருப்பமையினால் அப்பகுதி மக்கள் அதிசயமாக அதனை பார்வையிட்டுச் செல்கின்றனர். (அ-2)



## பாலத்தின் அடித்தள புனரமைப்பு சீரின்மையால் வயல்கள் பாதிப்பு

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு தெற்கு உண்ணாப்புலம் கமக்கார அமைப்பினரின் எல்லைக்குட்பட்ட முதலாம் கட்டை தொடக்கம் 3 ஆம் கட்டை வரையிலான பகுதியில் உள்ள பாலங்களில் அடித்தளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

புனரமைப்பின் போது வயல் மட்டத்தில் இருந்து ஒரு அடிக்கு மேல் இவ் அடித்தளங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

இதனால் விளை நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர் என முல்லைத்தீவு தெற்கு உண்ணாப்புலம் கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இப்புனரமைப்பு காரணமாக வயல் வெளிகளில் இருந்து நந்திக் கடல் நோக்கி வழிந்தோடும் நீரானது தடைப்பட்டுள்ளதால் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் அவை அழிவடையும் நிலையும் காண[illegible]கின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பரிதாப நிலையை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3)










நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள பிரதேச நகர சபைகளுக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கடமையை எப்போதும் செய்யத் துணிந்திடுங்கள் : இதுவே உண்மையான வீரத்தின் உச்ச நிலை. ~சிம்மன்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வீதி திருத்துபவர்களை கவனிப்பவர்களின் கவனத்திற்கு...

இது மாரிகாலம். குன்று குழிகள் எங்கும் நீர் நிரம்பி நிற்கும். சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை குளங்களையும் கிணறுகளையும் நாடி ஓடி நீச்சல் போட்டு மகிழும் காலமும் இதுதான்.

எனவே மாரிகாலத்தில் நீரால் ஏற்படக் கூடிய கண்டம் அதிகம் என்பதால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றுக்கப்பால் தற்போது வீதிகள் திருத்தும் பணிகளும் இடம்பெறுவதால் மாரிகால ஆபத்து அதிகம் எனலாம்.

வீதிகளின் ஓரங்கள் வெட்டப்படுவதால் அதில் நீர் தேங்கி நிற்கும் வாய்ப்பு அதிகம் என்பதால் பாதசாரிகள் அதில் விழுந்து எழ முடியாமலும் போகும்.

அதேநேரம் வாகனங்களை செலுத்துபவர்கள் பொறுப்பற்றவர்களாக-வேகத்துடன் வாகனங்களை ஓட்டினால் குன்று குழிகளில் தேங்கி நிற்கக் கூடிய தண்ணீர் வீதியால் செல்பவர்களை அபிசேகம் செய்யும்.

எனவே, மாரிகாலப் பயணம் ஆபத்து நிறைந்ததாக இருப்பதால் வீதிகளில் இறங்குபவர்கள் மிக்க அவதானத்துடன் நடந்து கொள்வது அவசியம்.

இவை பொதுவானவையாக இருக்க, வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்பு காரணமாக கருங்கற்களின் சிதறல்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை சறுக்கி விழுத்தி விடும் ஆபத்தை செய்யக் கூடியவை.

எனவே கருங்கல் சிதறல்களை ஒழுங்குபடுத்துவதன் அவசியத்தை வழியுறுத்த வேண்டிய பொறுப்பு வீதி திருத்தும் பணியை கண்காணிப்பவர்களுக்கு உரியதாகும்.

அத்துடன் வீதி திருத்த வேலை நடைபெறும் போது ஒரு வழிப்பயணம் நடைமுறைப்படுத்த வேண்டிய இடங்களில், வாகனங்களை நெறிப்படுத்தும் பணியில் வீதியின் இரு முனைகளிலும் பணியாளர்களை நிறுத்துவது கட்டாயமானதாகும்.

வழிப்படுத்துனர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் இரு முனைகளிலிருந்தும் வருகின்ற வாகனங்கள் வீதியை அடைத்துவிட, எதுவும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகின்றது.

இதனால் போக்குவரத்து நெருக்கடியை சந்திக்க வேண்டிய அந்தரிப்பு ஏற்படுகின்றது.

வீதி அகலிப்பு, புனரமைப்பு என்பன தேவையானவை. அந்தப் பணிகளில் ஈடுபடுகின்றவர்கள் நிறையவே அர்ப்பணிப்போடு செயற்படுகின்றனர் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. இருப்பினும் மழைகால சூழ்நிலையில் வீதிப் புனரமைக்கப்படும் இடங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்கக் கூடியதாக இருப்பதாலும் அத்தகைய நிலைமைகள் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதாலும்,

வீதி புனரமைப்பை கண்காணிப்பவர்களின் கண்காணிப்புப் பணி அசமந்தமானதாக இருக்கக் கூடாது.

மாறாக மிகவும் விழிப்புடைய கண்காணிப்பாக இருத்தல் அவசியம்.

# சிங்கள மக்களிடம்தான் மகிந்த வெற்றிபெற முடியும்

## தமிழர்களிடம் அவருக்கு தோல்விதான்-சுமந்திரன்

(கொழும்பு)

ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உதாசீனம் செய்துவிட்டு, தமிழ் மக்களிடையே தலைவர் ஒருவரைப் பலவந்தமாக திணிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அரசின் இந்த கபட நாடகம் பலிக்காது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் சிங்கள, பௌத்த மக்களிடம் மட்டுமே வெற்றிபெற்றுள்ளார். தமிழ் மக்களிடம் அவர் தோற்றவர்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 10 நாட்களுக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணி தமக்கு வேண்டும் என்று இலங்கை இராணுவத்தினர் பிரதேச சபைத் தலைவரிடம் பலவந்தமான முறையில் கேட்டனர். இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தமையையடுத்து குறித்த இடத்திலிருந்த காவலாளிகளை இராணுவத்தினர் அடித்து துரத்தி அந்த இடத்தைக் கைப்பற்றினர்.

இராணுவத்தினரின் இந்த அக்கிரமச் செயலை எதிர்த்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமாரை அவரிடம் இருக்கும் ஆவணங்களை எடுத்துக் கொண்டு வருமாறு பொலிஸார் பணித்திருந்தனர்.

இதனையடுத்து பொலிஸாரிடம் சென்று வாக்கு மூலம் அளித்துவிட்டு வந்த வசந்தகுமாரை இனந்தெரியாதவர்கள் தாக்கி அவரிடமிருந்த ஆவணங்களையும் பறித்து சென்றுள்ளனர்.

தலைநகரில் மட்டுமல்ல, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள யாழ்ப்பாணத்திலும் இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், அவர்கள் எவரும் கைது செய்யப்படுவதில்லை. இதுதான் நாட்டில் இன்று நடக்கும் காட்டாட்சியின் வெளிப்பாடு.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்காத இந்த அரசு அவர்களிடம் தோல்வையே தழுவியுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நுவரேலியா, கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷதோல்வியையே தழுவினார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? அவர் சிறுபான்மை மக்களிடம் தோற்று விட்டார் என்பதே தெளிவு.

சிங்கள, பௌத்த மக்களிடம் மட்டுமே வெற்றிபெற்ற இந்த அரசு அதனை அறியாதது போல் செயற்படுகிறது. ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உதாசீனம் செய்துவிட்டு, தமிழ் மக்களிடையே தலைவர் ஒருவரை திணிக்க அரசு முயற்சிக்கின்றது. அதுவே அரசின் இன்றைய தேவைப்பாடாகவும் இருக்கின்றது.

எது எப்படியிருப்பினும் அரசின் இந்த கபட நாடகத்திற்கு தமிழ் மக்கள் ஒரு போதும் பலியாக மாட்டார்கள். அர சின் நாடகம் எம்மிடம் எடுபடாதென்று இந்த அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்குமே தமிழ் மக்கள் எடுத்துக் கூறுவர் என்றார் சுமந்திரன் எம்.பி. (ந-11)

# 13ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றுவதால் சிறுபான்மையினரின் உரிமைகள் பறிபோகும்

## அனுமதிக்க முடியாது என்கிறார் - இரா.துரைரட்ணம்

வடக்குக் கிழக்கை நிரந்தரமாக இணைப்பதற்கு கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்த முடியாத அரசு, செயலாளர், அமைச்சர் சொல்லி 13 ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றுவதற்கு முற்பட்டால் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவது திண்ணமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை அகற்ற சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என முன்வைக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் குறித்து நேற்று திங்கட்கிழமை அவசரமாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் சுதந்திரத்திற்குப்பின் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்குவதில் ஒரு ஆரம்ப படியாக ஏற்படுத்தப்பட்டதே 13ஆவது திருத்தச்சட்டமாகும். அதனை அரசியலமைப்பிலிருந்து இல்லாதொழிக்க சிறுபான்மையினராகிய எம்மால் அனுமதிக்க முடியாது.

எமது நாட்டில் இனவாத ஆட்சியாளர்களால் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அனைத்தும் கிழித்தெறியப்பட்டதே வரலாறாகும்.

இது அனைவராலும் அறியப்பட்ட விடயம். இதற்குக் காரணம் இலங்கைக்குள் சிங்கள தேசிய ஆட்சியாளர்களால் சர்வதேசத்தின் எந்தவித அனுசரணை, பார்வை, மேற்பார்வை, கண்காணிப்பு எதுவுமே இல்லாது ஏற்படுத்தப்பட்டமையே ஆகும்.

இது மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் அல்லது பிரச்சினையில் எந்தவிதமான தீர்வையும் வழங்கக்கூடாது என்பதுமே காரணமாகும்.

இந்த நேரத்தில் இலங்கையின் சிறுபான்மையினரை பொறுத்தவரை யில் சர்வதேசத்தின் பார்வை விழிப்படைந்துள்ள நிலையில், இலங்கை அரசின் குற்றங்களை கண்டு பிடித்து விசாரிப்பதற்கான சூழல் பலமடைந் திருக்கின்ற நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதைநாம் அனுமதிக்கக்கூடாது. இலங்கை அரசாங்கம் சிறுபான்மை இனங்களுக்கு துரோகத்தை விளைவித்தும் சர்வதேசத்தின் பார்வை யில் மண்ணை தூவியும் ஏமாற்றியும் ஒருபக்க சார்பாக ஆட்சி முறையை குடும்ப ஆட்சிமுறையாக ஒரு வழிமுறைமைக்கு ஒப்பானதாக வழி நடத்தி வருகிறது.

இது ஒரு ஜனநாயக ஆட்சி முறைக்கு விரோதமானது. எம்மை பொறுத்தவரையில் பல ஒப்பந்தங்களால் ஏமாற்றப்பட்டு விரக்தியின் விளிம்பில் தமிழ் மக்கள் இருக்கின்ற ஒரு சர்வதேசத்தின் பார்வையுடன் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்பட்டால் கொஞ்சமாவது செயல்படுகின்ற மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட்டு விடும்.

இதனால் வடகிழக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபை ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஊடாக சிறுபான்மை மக்கள் அடையும் நன்மை இல்லாதொழிக்கப்பட்டால் அனைத்து விடயங்களிற்கும் கையேந்தவேண்டிய நிலைமையே ஏற்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## யோகாசன பயிற்சி

உடல்,உள,ஆரோக்கியத்திற்கானயோகசனமும் தளர்வு பயிற்சி (Yoga and Relaxation) புதிய வகுப்பு நாளை புதன்கிழமை காலை 6 மணி யளவில் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகாமை) ஆரம்பமாகவுள்ளது. மேற்படி பயிற்சி வகுப்பில் வயது வேறு பாடின்றி ஆண்கள், பெண்கள் கலந்து கொள்ளலாம் என பயிற்சி ஆசிரியர் ந.கோணேஸ்வரன்தெரிவித்துள்ளார். இவ்வகுப்பு வாரத்தில் வெள்ளி சனி,ஞாயிறு ஆகிய மூன்று தினங்களில் காலை 6 மணி-7 மணிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## விரிந்த உள்ளம் வேண்டும்



நம் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற ஆற்றலும் தூய்மையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கின்றன.

என்னால் முடியும் என்று நினைத்து செயலாற்றினால் அனைத்தையும் செய்து முடிப்பீர்கள்.

மனிதனைப் பிணைத்திருக்கும் பந்தம் என்னும் கட்டுகள் அனைத்தும் கடவுளின் கருணையால் மட்டுமே அவிழும்.

தூய்மையான நல்லெண்ணம் கொண்டவர்கள் இந்தப் பிறவியிலேயே கடவுளைக்காணும் பேறு பெறுவர்.

உலகத்தைப்போல நம் உள்ளமும் பரந்து விரிந்ததாக இருக்கட்டும்.

மனிதனை உருவாக்குவதில் இன்ப துன்பம் இரண்டும் சமமான இடத்தைப் பெறுகின்றன.

தன்னைச் சரிபடுத்திக் கொண்டால் உலகையும் சரிப்படுத்தும் தகுதியைப் பெற முடியும்.

இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசானாக இருந்து நமக்கு வழி காட்டுகிறது.

மனித உயிர் தெய்வத்தன்மை கொண்டது ஆனால் ஜடப்பொருளின் கட்டுக்குள் அகப்பட்டு கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்



சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் 14, 16, 18, 21 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு, 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாதமையினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. 16 வயதுப் பிரிவு அணிகளுகிடையிலான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது.

★ ★ ★ ★

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிக்ள் கடந்த வியாழக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி 14 வயது பிரிவில் 1:0 என்ற கோல்க்கணக்கிலும் 16 வயதுப் பிரிவில் 2:0 என்ற கோல்க்கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண் டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது.

★ ★ ★ ★

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 14 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டியது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 4:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டியுள்ளது. 21 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்க்கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை தோற்கடித்தது.

★ ★ ★ ★


யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 14 வயது, 16 வயது, 18 வயது, 21 வயதுப் பிரிவுகளுக்கான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 14 வயது பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது.

# சாதனையாளர்களுக்கு இன்று கௌரவிப்பு

அம்பாந்தோட்டை ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் வர்ண விருதுகளைப் பெற்ற வீர, வீராங்கனைகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி



ஜனாதிபதி தங்கக்கிண்ண கரப்பந்தாட்டத் தொடருக்கான பதிவுகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகள் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பின் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டித் தொடரில் அதிகளவான அணிகள் பங்குபற்ற வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு சபை நடத்தும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 5 பேர் பங்குபற்றம் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் வ்ட்டுக்குோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி,யாழ்.மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய 9 பாடசாலைகள் மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளன.

---


தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 14, 16,18 வயது ஆண்கள் பிரிவு, 14,18 வயது பெண்கள் பிரிவு ஆகிய அணிகளுக்கிடையிலான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன,போட்டி அட்டவணை தயாரிக்கும் ஒன்றுகூடல் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றுள்ளது. ஆகவே, போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகளின் விளையாட்டு பொறுப்பாசிரியர்களை அணிகளின் விபரங்களுடன் அனுப்பி வைக்குமாறு பாடசாலைகளின் அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேம காந்தன் கேட்டுள்ளார்.

# சதுரங்கச் சுற்றுப் போட்டி

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சதுரங்க சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

9 வயது, 10 வயது,11 வயது, 12 வயது ஆகிய வயதுப்பிரிவு ஆண், பெண்களுக்கு தனித்தனியாகப் போட்டிகள் நடைபெறும்.

மேற்படி போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பொறுப்பாசிரியருடன் சதுரங்கப் பலகை, காய்கள் ஆகியவற்றுடன் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம் காந்தன் அறிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ்லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டி
# யோர்க்சையரை வீழ்த்தியது சென்னை சிங்கங்கள்



சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தென்னாப்பிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று மாலை 5 மணிக்கு தொடங்கிய போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - யோர்க்சையர் அணிகள் மோதின. இந்திய அணியில் தோனிக்குப் பதிலாக ரெய்னா அணித்வர் பதவியை ஏற்றிருந்தார். நாணயச் சுழற்சியில் வென்ற ரெய்னா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

யோர்க்கையர் அணியில் கேல்-லித் வீரர்கள் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினார்கள்.

5.1 ஓவர்களில் 35 ஓட்டங்கள் இருக்கும் போது கேல் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து லித்துடன் ரூட் ஜோடி சேர்ந்தார். லித் 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹில்பனாஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக ருட்டுடன் மில்லர் ஜோடி சேர்ந்தார். ரூட் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 4ஆவது விக்கெட்டுக்காக மில்லருடன் பேலன்ஸ் ஜோடி சேர்ந்தார். மில்லர் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் போலிங்கர் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து பேலன்சுடன் ரஷித் ஜோடி சேர்ந்தார். பேலன்ஸ் சிறப்பாக விளையாடி 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். யோர்க்சயர் அணி குறிப்பிட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டிழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்தது. ரஷித் 4 ஓட்டத்துடனும், ஹாட்சன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.



141 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் டு பிளிசிஸ் ஒரு ஓட்டத்துடன் பட்டர்சன் பந்தில் ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக அணித்தலைவர் ரெய்னா விஜயுடன் ஜோடி சேர்ந்தார். விஜய் 13 ஓட்டங்களில் டால்பி பந்தில் ஆட்டமிழந்தார் அவர் 12 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 13 ஓட்டங்கள் எடுத்தார். 3ஆவது விக்கெட்டுக்காக ரெய்னாவுடன் பத்ரிநாத் ஜோடி சேர்ந்தார் சென்னை அணியின் ஓட்ட எண்ணிக்கை 74ஆக இருக்கும் போது இந்த ஜோடி பிரிந்தது.ரெய்னா 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து பத்ரிநாத்துடன் தோனி ஜோடிசேர்ந்தார் இந்த ஜோடி சென்னை அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது.பத்ரிநாத் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் இதில் 4 பவுண்டரி அடங்கும். தோனி 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் இதில் இரண்டு பவுண்டரி, இரண்டு சிக்ஸர்கள் அடங்கும். அடுத்துவந்த மோர்கள் 4 ஓட்டங்கள், சகா ஒரு ஓட்டம் எடுக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 19 ஓவர்களில் 141 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை சுப்பர் கிங்ஸின் சுப்பிரமணியம் பத்ரிநாத் தெரிவானார்.



# ரைற்றன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா இலகுவான வெற்றி

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது போட்டியில் கொல்கத்தா நைட் ரைட்டர்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றது. ரைற்றன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 99 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நியூலன்ட்ஸில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரைற்றன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 188 ஓட்டங்களைப்பெற்றது. ஆரம்ப முதலே அதிரடியாக ஆடிய அவ் அணி, 2.5 ஓவர்களில் 32 ஓட்டங்களை பெற்றிருக்கும் போது முதலாவது விக்கெட்டையிழந்த போதிலும் தொடர்ந்துவந்த வீரர்கள் அதிரடியாக ஆட சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப்பெற்றது. துடுப்பாட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி சார்பாக கௌதம் காம்பீர் 36 பந்துகளில் 44 ஓட்டங்களையும், தேப்ரட்டா தாஸ் 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் பிரண்டன் மக்கலம் 20 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரைற்றன்ஸ் அணி சார்பாக வண்டர்மேவா 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எதி எம்பலாட்டி, கோர்ன்லியஸ் டி வில்லியர்ஸ், டேவிட் வியஸி ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ரைற்றன்ஸ் அணி 16.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அவ் அணி ஒருகட்டத்தில் 7.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 51 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதும், அடுத்த 4 விக்கெட்டுக்களும் 9 ஓட்ட இடைவெளியில் வீழ்த்தப்பட்டிருந்தன. அவ் அணியில் முதல் மூன்று வீரர்களைத் தவிர அனைத்துவீரர்களும்ஒற்றைப்படை ஓட்டங்ளையே பெற்றனர்.துடுப்பாட்டத்தில் ரைற்றன்ஸ் அணி சார்பாக ஜக்ஸ் ரூடோல்ப் 24 பந்துகளில் 25 ஓட்டங்களைப்பெற்றார். ஏனைய எவரும் 20 ஓட்டங்களைத் தாண்டியிருக்கவில்லை. பந்துவீச்சில் பாலாஜி 4, திவாரி 2,கலிஸ், நரைன் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய தேப்ரட்டா தாஸ் தெரிவானார்.

# உலக அணியை வீழ்த்தி தொடரை வென்றது பாக்.



பாகிஸ்தானில் இடம்பெற்று வந்த சர்வதேச உலக பதினொருவர் அணிக்கும், பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான போட்டியிலும் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. கராச்சி தேசிய மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சர்வதேச உலக பதினொருவர் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக் களையிழந்து 142 ஓட்டங்களைப்பெற்றது. தொடக்கம் முதலே விக்கெட்டுக்களை யிழந்த அவ் அணியால் எந்தவொரு கட்டத்திலும் ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை. ஒரு கட்டத்தில் 15.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக் களையிழந்து 85 ஓட்டங்களைப்பெற்றிருந்த அவ் அணி இறுதி வீரர் நன்ரி ஹேய்வேர்ட்டின் அதிரடியால் 142 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சர்வதேச உலக பதினொருவர் அணி சார்பாக நன்ரி ஹேய்வேர்ட் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், அன்ட்ரே சேய்மோர் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி சார்பாக பராஸ் அகமட் 3 விக்கெட்டுக்களையும், தபிஸ்கான் 2 விக்கெட்டுக்களையும், சொஹைல் கான், சொய்ப் மலிக், உமர் அக்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி 16.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணியின் இம்ரான் நஷீர் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்க்கையை ஒரு வருடத்தில் மாற்றும் அரிய சந்தர்ப்பம்.
விஜயதசமி அன்று MCS இல் கீழ்வரும் கற்கை நெறிகளிற்கு பதிவுகளை மேற்கொள்வோருக்கு 10,000/= discount வழங்கப்படும்.
CIMA-UK-Cima part qualification
DIT-Colombo University -Diploma in Information Technology
Software Engineer
Computer Engineer-USA
MCS ITCAMPUS 324, Palaly Road, Jaffna, 0772395895


# ஐ.நா தீர்மானத்திற்கு அமைய...

சம்பவங்கள் பல இடங்களில் நடைபெறுவதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

முக்கியமாக தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலங்கள் இராணுவத்தினரால் தொடர்ந்தும் அபகரிக்கப்படுகின்றது.

இந்தக் காரணத்தினால்தான் இதனை நீண்டகாலமாக போருக்குப் பின்னரும் குரல் கொடுத்து வருவதோடு பல போராட்டங்களையும் நடத்தி வருகின்றோம்.

மக்களுக்குச் சொந்தமான நிலத்தில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என எமது கூட்டங்களிலும் பாராளுமன்றிலும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதோடு 2011-ம் ஆண்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவுடனான சந்திப்பில் இந்த நில அபகரிப்பு மீள் குடியேற்றம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம்.

ஆனால், ஜனாதிபதி இம்முறைப் பாடுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.எனினும் தற்போது அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இராணுவம் 60 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார்கள்.

இதில் எந்தளவிற்கு உண்மை இருக்கிறது என எமக்குத் தெரியவில்லை.

இங்குள்ள இராணுவம் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரித்தும், இராணுவக் குடியேற்றங்களை நிறுவியும் அதிலும் முக்கியமாக சீன நாட்டு உதவியுடன் படை முகாம்களையும் நிறுவி வருகின்றது.

இராணுவத்தினரின் உளவுத் துறையினர் இந்த நிலங்களை எடுப்பதற்காக பிரதேச சபைகளின் தலைவர்களுக்கும், செயலாளர்களுக்கும் நெருக்கடிகளையும் அச்சுத்தல்களையும் கொடுத்து வருகின்றனர்.

அதனுடைய வெளிப்பாடுதான் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டமையாகும்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டியதுடன் மட்டுமல்லாது, இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளிற்கு பாதுகாப்பு இல்லை என்ற உண்மை இன்று பகிரங்கமாக வெளிப்பட்டுள்ளது.

எங்களுடைய மக்களின் போராட்டத்தின் விளைவாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் சென்ற மார்ச் மாதம் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருந்தது.

அதில் போர் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ தமது சொந்த இடங்களில் இருந்து அகற்றப்பட்ட மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படல் வேண்டும். வட பகுதியில் குவிக்கப்பட்ட இராணுவம் குறைக்கப்படல் வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும். காணாமல்போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக சுயாதீனமான, நிரந்தரமான நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு அரசு தன்னுடைய நம்பகத் தன்மையையும் பொறுப்பினையும் நிரூபிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

எனினும் சர்வதேசத்தின் குரலுக்கு மதிப் புக் கொடுக்காத அரசு இராணுவத்தினரை வைத்து தனது அடாவடித்தனத்தினை அரங்கேற்றி வருகின்றது.

தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளினை வாழும் உரிமையை அரசு மறுத்து நிற்கும் நிலையில் அதற்கு எதிராக நாம் போராட வேண்டியவர்களாக உள்ளோம்.

தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரின் ஆதிக்கம் நிர்வாக நடவடிக்கைகளிலும் சரி மக்களின் சுகாதார நடவடிக்கைகளில் சரி அல்லது தேர்தல் நடவடிக்கைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும் மிகத் தீவிரமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச சபை காணி அபகரிப்புத் தொடர்பில் அதனை விசாரிப்பதற்கும் அதற்குத் தீர்வு காண்பதற்கும் எவ்வித உரித்தும் பொலிஸாருக்குக் கிடையாது.

இராணுவம் இக் காணியினை தனது அடாவடியின் மூலம் அனைத்து சட்டவிதிகளையும் மீறி கைப்பற்றியுள்ளது.

இதேபோல் வடக்குக் கிழக்கில் உள்ள பல பிரதேசங்களில் பல சம்பவங்கள் நடைபெற்று வருவதோடு இவை தொடர்பில் உச்ச நீதிமன்றில் நூற்றுக்கணக்கான வழக்குகளும் எம்மால் தொடரப்பட்டுள்ளன.

போர் முடிந்த காலத்தின் பின்னர் கிறீஸ் பூதமென பெண்களை இலக்கு வைத்தார்கள்.

பின்னர் மக்கள் பிரதிநிதிகள் கூட்டங்கள், போராட்டங்கள் மீது கழிவு எண்ணெய் வீசப்பட்டதோடு யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் ஜெயக்குமார் வீட்டிற்கும் கழிவு எண்ணெய் வீசப்பட்டதோடு பேராசிரியர் சிற்றம்பலத்திற்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

இவையனைத்தும் இராணுவ முகாம்களில் பயிற்சி பெற்றவர்களால்தான் அரங்கேற்றப்பட்டன என நாம் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அரசிற்கும் பொலிஸாருக்கும் நாம் கூறுவது என்னவென்றால்,

எத்தனையோ விடங்களினை தேடிப்பிடிக்கிறீர்கள். குற்றவாளிகளை கண்டுபிடிக்கிறீர்கள். நீதிமன்றங்களில் நிறுத்துகிறீர்கள்; எல்லாம் ஒழுங்காக நடக்கிறது. ஆனால் ஏன் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுபவர்களை கண்டுபிடிக்க முடியுவில்லை?

வடக்கு கிழக்கில் இத்தனை பொலிஸ் நிலையங்கள், இராணுவ காவலரண்கள், பலநூறு ரோந்து நடவடிக்கைகள் இருக்கின்ற போதிலும் இப்படிப்பட்ட குற்றவாளிகள் எப்படி ஆயுதபாணிகளாகவும், கழிவு எண்ணெய் வீசுபவர்களாகவும் கத்திகள் பொல்லுகளுடன் சுதந்திரமாக உலாவ முடிகின்றது? இதற்கு பொலிஸார் பதில் கூறியாக வேண்டும்.

இவற்றினைவிட இங்கு மீள் குடியேற்றம் என்பது முக்கியமான விடயமாகும்.

அரசு மீள்குடியேற்றம் எல்லாம் முடிந்து விட்டது எனக் கூறுவது முழுப் பொய்யாகும். உண்மைக்கு மாறானது.

3 லட்சம் மக்கள் இங்கு வரவேண்டி இருக்கிறார்கள். உள்நாட்டிலும் கூட அகதி முகாம்களில் மக்கள் இருக்கின்றனர்.

வலி வடக்கினைச் சேர்ந்தவர்கள் 11 முகாம்களில் உள்ளனர்.

இந்தியாவில் 70 ஆயிரம் மக்கள் முகாம்களில் உள்ளனர்.ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் முகாமுக்கு வெளியே உள்ளனர்.

இவர்கள் ஏன் இன்னமும் 25 வருடங்களாக மீள்குடியேற்றப்படாமல் உள்ளனர் என்றால் இவர்களுடைய நிலங்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு உள்ளதோடு உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் உள்ளன.

இவ்வாறான இராணுவ ஆக்கிரமிப்புகளில் இருந்து விடுபடுவதற்காகவும், பிரதேச சபைகளின் [illegible] உறுதிப்படுத்துவதற்கும் நாம் அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் தொடர்ந்தும் போராட வேண்டியவர்களாக உள்ளோம் என்றார் மாவை. (ந-4)

# கூட்டமைப்பு...

கேள்வியை எழுப்பியுள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தினை அடிப்படையாக கொண்டே தீர்வு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரி வருகிறது. இந்தியாவும் இதனையே வலியுறுத்துகிறது. இந்த நிலையில் அரசாங்கத்தின் பல்வேறு உறுப்பினர்கள் இதனை நீக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

தமிழ் மக்களுக்கான தீர்வுக்கு ஜாதிக ஹெல உறுமய,விமல் வீரவன்ச போன்றோர் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 19 அரசாங்க உறுப்பினர்கள் உள்ளனர்.எதிர்க் கட்சிகளின் சார்பில் 12 உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர். இதிலும் அரசாங்கமே பெரும்பான்மை வகிக்கிறது. இவ்வாறான ஒரு குழுவில் அரசாங்கத்தின் கருத்துக்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைவதில் சாத்தியம் இல்லை என்று சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது தீர்வுத்திட்டத்தை எழுத்து மூலம் சமர்ப்பித்திருப்பதாகவும் ,கடந்த ஒரு வருடமாக அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தை எழுத்து மூலமாக வழங்குமாறு கோருகின்றபோதும்,அதனை இன்னும் அரசாங்கம் வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லாது போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-11)

திசை காட்டி பிறைவேற் லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

பதிவு இல. (Pv 82703)

- ஒன்றரை வருட காலமாக நேர்மையாக உள்ளதை உள்ளபடி சொல்லி விசா ஆலோசனை விற்பனையை கண்ணியத்துடன் வெற்றிகரமாக நடாத்தி வரும் தனித்துவமான நிறுவனம்.
- முதன்முதலாக இலங்கையின் தென்பகுதியிலிருந்து மூவின மக்கள் எம்மிடம் விசா ஆலோசனை பெறுவதற்காக யாழ்ப்பாணம் வருகின்றமை ஆதாரபூர்வமான உண்மையாகும்.
- விசா ஆலோசனைப் பணத்தை பயனாளிக்கு மீளளித்ததன் மூலம் முன்மாதிரியானவர்கள் என்ற மகுடத்திற்கு பொருத்த மானவர்கள் என நிரூபித்தவர்கள் நாமே.
- ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசாவில் வடபுலத்தில் தன்னிகரில்லா வெற்றிகள் கண்ட முதன்மை நிறுவனம்.
- சர்வதேச விசா ஆலோசனை விற்பன்னர்கள் மூலம் எந்த நாட்டிற்கும் Visit Visa ஆலோசனையை மேற்கொள்ளும் ஒரேயொரு நிறுவனம் வடக்கில் நாமே.
- இன்னும் இளைஞர்களிற்கு எந்த நாட்டிற்கும் STUDENT VISA பற்றியும் பக்குவமான பரிந்துரைப்பு

37,சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016
புதன்கிழமைகளில் திறக்கப்படமாட்டாது.
தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகளிற்குப் பதிலிறுக்கப்படமாட்டாது.
(C-1176)

புத்தக விற்பனையாளர்
தேவை
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று, அதிபர்கள், ஆசிரியர்களைச் சந்தித்து, காந்தளகம் யாழ்ப்பாணம் வெளியிட்ட
1. பள்ளி மாணவர்களுக்கான நிலவரை-இலங்கை,
2. பள்ளி மாணவர்களுக்கான நிலவரை-உலகம்,
3. உலகெங்கும் தமிழர்,
4. பொன் முத்துக்குமாரன் இயற்றிய தமிழ் மரபு
ஆகிய நூல்களையும் பிற நூல்களையும் மாணவர்களுக்கு விற்பனை செய்வதில் ஆர்வமுள்ள, மின்னஞ்சலில் தொடர்பாக இருக்கும் திறமையுள்ளோர் தங்களது வாழ்க்கைக் குறிப்புடன் தொடர்பு கொள்க tamilnool@gmail.com
அல்லது 0094 772754864.
தகுதிக்கேற்ற சம்பளமும் விற்பனைத் தொகையில் கழிவும்.
(806)

யாழ்.நகரில்......
Diploma in Mass Media
அறிவிப்பாளர் பயிற்சி

வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகின்றீர்களா!
இதோ......
வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ். மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சிநெறி
(Diploma Mass Media)
வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்.
தயாராகுங்கள்
பதிவுகளுக்கு விரையுங்கள்.
இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக வேண்டுமா?...
அனைத்து வகுப்புக்களும் நவம்பர் மாதம் 5ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும்.
வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College,
No:26,Station Road,
Vavuniya.
T.P.No:0770584658
குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச தனியார், வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளர்களாக கடமைபாற்றுகின்றார்கள்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாணவர்கள்
IISEEES NALLUR CAMPUS
No. : 762 Point Pedro Road,
Nallur, Jaffna.
T.P.No:0770584658 / 0242224728
(க-1363)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org